# அமுதநதி

AMUTHANATHI

ISSN : 2602-8832

கலை, இலக்கிய, சமூக காலாண்டிதழ்

எண்ணுவதுயர்வு...

நதி: 02 கிளை: 06 ஒக்டோபர் - டிசம்பர், 2018

100/-

- ஈழம் தந்த கொடை – பாலச்சந்திரன்
- இணையமும் மாணவரும்
- முற்றத்து மல்லிகை – ச.ஞானதீபன்
- மனோன்மணியம் காட்டும் கல்வியியல் சிந்தனைகள்
- கற்பித்தல் முறைமைகள்
- கண்ணகியையும் கற்பழிப்பவர்கள்

# வடக்கில் மல்லிகை!

## மதுரை மல்லிகை செயற்றிட்டம்

## தம்பா மாதிரிப் பண்ணை



மல்லிகைப்பூக்களின் தொடர்புகளுக்கு...

**Thampa Tourist Hotel**

Sinnaputhukkulam, Vavuniya.

Tel: 024 5670262 / 077 7183963

www.thampahotel / info@thampahotel.com

## இதம் ஒரு குறள்

அதிகாரம் : அறத்துப்பால்
குறள் : 01

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

**பொருள் :** எழுத்துக்கள் எல்லாம் அகரத்தில் தொடங்குகின்றன. அது போல் உலகம் கடவுளில் தொடங்குகின்றது.


அமுதநதி

ஆசிரியர்
திருமதி.அ.நெலோமி

ஆலோசகர்கள்
திரு.அ.அன்றனி குரூஸ்
திரு.ந.பார்த்தீபன்

வெளியீடு
வன்னியூர்க் கவிராயர்
கலை இலக்கியப் பேரவை

அச்சுப் பதிப்பு
விஜய் அச்சுப் பதிப்பகம்
172, மில் வீதி, வவுனியா.
077 900 9491 / 024 222 5799



தொடர்புகளுக்கு

வன்னியூர்க் கவிராயர்
கலை இலக்கியப் பேரவை
இலுப்பங்குளம், நேரியகுளம்.

விரிவுரையாளர் விடுதி
இல: 07,
வ/தேசிய கல்வியியற் கல்லூரி,
பூந்தோட்டம், வவுனியா.

077 2640202
071 6958230
amuthanathy@gmail.com
முகநூல்: Facebook/அமுதநதி



இச்சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களுக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர்

விளம்பரங்களில் உள்ள விடயங்களுக்கு விளம்பரதாரர்களே உரித்தாவார்கள்


## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து...

அண்மையில் வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் "கலாம் கலைஞர் கழகம்" தனது ஒரு வருட நினைவைப் பூர்த்தி செய்தது இதன்போது ஆண்டு மலர், சிறுகதைத் தொகுப்பு மற்றும் சமூகத்திற்கு நல்ல செய்தியொன்றைச் சொல்லக்கூடிய குறும் படம் ஒன்றையும் வெளியிட்டது.

விஞ்ஞானி அப்துல் கலாமின் பெயரை தமது கழகத்திற்குச் சூட்டி மிகுந்த பிரயாசையுடன் செயற்படும் இக்கழகம் கடந்த வருடம் உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர் களாலே உருவாக்கப்பட்டது என்பது தான் சிறப்பான விடயம். முகநூலுக்குள்ளேயும், கைத்தொலைபேசி உரையாடல்கள், குறுஞ் செய்திகள், கேளிக்கை, களியாட்டங்கள் என்பவற்றுக்குள்ளும் புதைந்திருக்கும் எம் இளைய சமூகத்தினரிடையே இவ்வாறான செயற்றிறனும், ஆக்கத்திறனும் துடிப்பும் சமூக அக்கறையும் கொண்ட இளம் இரத்தங்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள் என்பது அரிதானதும் நம்பிக்கை தரும் விடயமுமாகும்.

இவ்வாறான துடிப்பு மிகுந்த நற்செயல்க ளுக்கு எத்தனை பேர் ஆதரவு கொடுக்கி றார்கள் என்பதே மிகப் பெரிய கேள்வி

சாதாரண இலக்கியக் கூட்டங்கள், நூல் வெளியீடுகளுக்கு சமூகமளிக்கும் சராசரி எண்ணிக்கையினர் தான் இங்கு இடம் பெற்றிருந்தனர். மேலதிகமாக இருந்து

பொலிவூட்டியவர்கள் இளைஞர் அணியினர் தாம். அவ்விளைஞர்களின் துடிப்பு, வேகம், பிரயாசை, அலைச்சல், ஆகியவற்றை ஈடுசெய்யும் விதமாக அத்தொகை அமையவில்லை என்பதும், இது அவர்களைத் துவண்டு போகச் செய்திருந்தது என்பதும் உண்மை.

தகாத வழியில் சென்றால் தட்டிக் கேட்பதற்கும், தண்டனை கொடுப்பதற்கும் ஒன்று திரளுகின்றவர்கள் ஏன் இவ்வாறானவர்கள் செய்யும் நல்ல செயல்களுக்கு தமது ஆதரவையும், பங்களிப்பையும் வழங்கத்தவறு கின்றார்கள் சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது என்று நினைத்து விட்டார்களா?

இலங்கை நாட்டின் ஒவ்வொரு பிரதேசத்திலும் கிராமங்களிலும் இருக்கும் இளைஞர் அணியின் ஆக்கத் திறனையும், செயல்திறனையும் இனங்கண்டு ஊக்குவிப்புச் செய்தாலே சமூகத்தில் விரும்பத்தகாத பல விடயங்கள் தானாக மறைந்து போய் விடும். சமூகச் சிக்கலுக்குள்ளே நல்ல விதைகளைத் தான் எம்மால் விதைக்க முடியவில் லை என்றாலும் தானாக முளைப்பவைகளை என்றாலும் வளர்த்து விடக் கூடாதா?

வைரக்கற்களை சகதிக்குள் புதைக்காமல் பட்டை தீட்டி மகுடங்களில் ஜொலிக்க வைப்போம்.

நன்றி

- **ஆசிரியர்**

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஜாதி மல்லிகை | 03 |
| ஈழம் தந்த கொடை | 10 |
| இணையமும் மாணவர்களின் சுயகற்றலும் | 13 |
| முற்றத்து மல்லிகை | 16 |
| மனோன்மணியம்... | 18 |
| நூல் அறிமுகம் | 21 |
| அவரும் ஏழைதான் | 23 |
| ஆசிரியரின் ஓர் நாள் | 26 |
| கற்பித்தல் முறைகள் | 28 |
| தீர்ப்பு | 32 |
| பிரண்டை மருத்துவம் | 44 |
| வரட்சிக்கு ஏற்ற மூடாக்கலும்... | 48 |
| மைதானச் செயற்பாடுகளும்... | 51 |



தனிப்பிரதி: 100/-

ஒரு வருட சந்தா : 400/-
(தபாற்செலவு உள்ளடங்கலாக)

சந்தா வைப்புகளுக்கு...
**திருமதி.அ.நெலோமி**
கணக்கிலக்கம்: 8760988
இலங்கை வங்கி
வவுனியா கிளை

சஞ்சிகை கிடைக்க வேண்டிய முகவரியையும் பணம் வைப்பிலிட்ட ரசீதினையும் எமது வழமையான முகவரிக்கு அல்லது அமுதநதி முகநூல் உள்பெட்டிக்கு அனுப்பிவையுங்கள்.

# ஜாதி மல்லிகை

வளன்முகி

இந்தியன் எயார்லைன் விமானம் பறப்பதற்குத் தயாராகி விட்டது. அழகிய இளஞ்சிட்டுகளாக குட்டைப் பாவாடை அணிந்த விமானப்பணிப் பெண்கள் அங்குமிங்கும் துருதுருத்துக்கொண்டிருக்கின்றனர். பயணிகளின் இருக்கை களைச் சரிசெய்தும், ஆசனப்பட்டிகளை அணியும் படியும் கூறிக்கொண்டு பரபரக்கின்றனர். செக்கச்சிவந்த உதட்டுச்சாயம் பூசப்பட்ட உதடுகளின் உச்சரிப்பில் ஆங்கிலம் வழுக்கிக்கொண்டு விழுகிறது. பயணிகளுக்கிடையில் நடுநாயகமாக நின்றுகொண்டு பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தல்களை முடுக்கி விட்ட பொம்மைபோல் இளம் பெண்ணொருத்தி சைகை மூலம் அபிநயித்துக் கொண்டு நிற்கின்றாள். எத்தனை தடவை தான் இதை செய்து காட்டியிருப்பார்களோ.!

விமானம் பறக்கத்தொடங்கி ஐந்து நிமிடங்கள் கடந்த நிலையில் தள்ளு வண்டியில் காலை உணவைத் தள்ளிக்கொண்டு அழகிய பெண்ணொருத்தி மலர்ந்து கொண்டு வருகிறாள்.

காலைச் சூரியனின் ஒளித்தெறிப்பில் முகிற் கூட்டங்கள் பிரித்துப் போட்டு விட்ட பஞ்சுப் பொதிகளாக கொத்து கொத்தாக திரண்டு போய்த் தகதகக்கின்றன. இத்தனைக்கும் ஜன்னல் கரையோரமாக இருக்கும் என் மனைவி குதூகலித்துக் குதித்திருக்க வேண்டும்.

நான் திரும்பி என் மனைவியைப் பார்க்கின்றேன். முகம் இறுகிப் போய்க்கிடக் கின்றது. அவளின் கண்கள் வெறுமனே அந்த விமானப் பணிப் பெண்களின் செயல்களை நோக்கிக் கொண்டு இருக்கின்றன. வரும்போது தனக்கு ஜன்னல் கரைவேண்டும் என்று குழந்தையாக அடம்பிடித்து முகில் கூட்டங்களில்

இலயித்துப் போய் என்னைச் சுரண்டி சுரண்டிக் காட்டிக் கொண்டு வந்தவள் இப்போது எதுவும் பேசாமல் முகத்தை "உர்" என்று வைத்துக் கொண்டிருப்பது என்னவோ போல இருக்கின்றது.

இப்ப என்ன நடந்தது என்று முகத்தை இப்படி வைத்திருக்கிறாள் என் மேல் உள்ள கோபத்தை இப்படிக் காட்டுகின்றாள் எள்று தெரிகின்றது. அதற்காக 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டு வித விதமான முகில் கூட்டங்களின் அழகை இரசிக்கும் வாய்ப்பை அவள் தவறவிடுவதை அனுமதிக்கக் கூடாது.

"சந்திரா. அவள் காதுகளுக்குள் கிசுகிசுக்கின்றேன். அவள் அது வரை திறந்து வைத்திருந்த கண்களை இறுக மூடிக் கொண்டு என்னை விட்டு இன்னும் ஒதுங்கி அமர்ந்து கொண்டாள்.

ஓ... கோபம் மிகக் கடுமையாகத்தான் இருக்கிறது.

.கோபத்திலும் அழகாக இருக்கின்றாள். நெற்றியிலும் காதோரங்களிலும் ஒற்றையாய் சுருண்டு கிடந்த கேசம் அவள் முகப் பொலிவைக் கூட்டிக் கொண்டிருக்கிள்றன. அவள் கோபமும் புறக்கணிப்பும் எனக்குள் சிரிப்பைத் தான் வரவழைக்கின்றன. எவ்வளவு தான் சண்டை என்றாலும் எனது கோமாளிக் கூத்துக்கு "குபீர்" என்று சிரித்து விடும் சுபாபம் அவளுக்கு இதுதான் சாக்கு என்று அந்த நேரம் இறுக அணைத்து ஒரு தட்டாமாலை சுற்றினால் போதும். எனக்கு இறுக்கி ஒருகிள்ளு கொடுத்து விட்டு கோபத்தையெல்லாம் காற்றில் பறக்க விட்டு விடுவாள்.

குழந்தைத் தனமான குதூகலிப்பும் வாய்வலிக்க எதாவது பேசிக் கொண்டி ருக்கும் அவளை நான் மட்டுமல்ல எமது பிள்ளைகள் கூட இரசிக்கத் தொடங்கிவிட்டனர். மூளை நினைப்பதையெல்லாம் வெளியே கொட்டிவிட்டு நிம்மதியாக இருப்பதால் தான் என்னவோ இவளால் மனஅழுத்தம் இல்லாமல் குதுகலிக்க முடிகின்றது.

அப்பா எப்படியப்பா இந்த அம்மாவ சமாளிக் கிறீங்க? "அது தான் யோசிச்சுப் பாருங் கோவன் நான் எவ்வளவு கஸ்ரப்பட்டிருப்பன்"

ஏன் நானே கேட்டனான் நீங்க தானே என்ன இருக்க விடாமல் பின்னால திரிஞ்சனீங்கள் தடாடலடியாக அவ ளின் பதில் புறப்பட்டும். உண்மை தான். நான் எங்கே அவளை நிம்மதியாக இருக்க விட்டேன். இடுப்பு வரை நீண்டு

தொங்கிய இரட்டைப் பின்னலோடு இழுபட்டுத் திரிந்தவன் தானே. நான் எப்போதும் அவள் இதழ்க் கோடியில் கொலுவிருக்கும் புன்னகைக்கு அடிமைப்பட்டு அலைந்தவன் தானே நான்.

பக்கத்தில் மனைவியை வைத்துக் கொண்டே அவளைப் பற்றி சிந்தித்து புளகாங்கிதம் அடையும் உணர்வு எனக்கு புதுமையாக இருக்கிறது. அவளைத் திரும்பிப் பார்க்கின்றேன். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு இருந்த அதே பொலிவு, அதே பூரிப்பு, அதே குழந்தைத் தனம். பிடிவாதம், நெற்றியின் முன்புறம் வெள்ளிக் கம்பிகள் ஒரு சில இழையோடிக் கொண்டிருப்பது கூட அழகாகத் தான் இருக்கின்றது. அவள் நெற்றிப் பொட்டில் முத்தமிட்டு நெஞ்சோடு அணைக்கும் உணர்வு எனக்குள்....

விமானப் பணிப்பெண் எம் இருவருக்குமான அழகிய உணவுத் தட்டுக்களை எடுத்துத் தருகின்றாள். இது தான் சாட்டு என்று சந்திராவின் கரங்களைத் தொடுகின்றேன். விறுக்கென்று இழுத்துக் கொள்கிறாள்.

"இன்னும் அரைமணிநேரத்தால இறங்கிவிடுவம். அதுக்கிடையில் சாப்பிடுங்கோ. என்னைத் திரும்பி பார்த்து விட்டு மீண்டும் கண்களை மூடிக் கொள்கிறாள். எனக்கு வேணாம் நீங்க சாப்பிடுங்கோ என்பது போல இருக்கின்றது.

என் அக்கா மகளுக்கு இலண்டன் மாப்பிள்ளை சரிவந்து இந்தியாவில் கலியாணம் என்றவுடன் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது சந்திரா தான். கலியாணம் முடிய எல்லா இடமும் சுற்றிப் பார்த்து நிறைய சாறி, உடுப்பெல்லாம் வாங்கவேணும். என்று திட்டம் போட்டு புறப்பட்டவளும் அவள் தான். திருமணம் முடிந்த கையோடு ஒரு வாரமாக எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து ஒரு விமானப் பயணிக்கு அனுமதிக்கப்பட்ட 30 கிலோகிராம் பொதிப் பாரத்தையும் வீணாகாமல் கொஞ்சம் அதிகமாகவே வாங்கிக் குவித்தவளும் அவள்தான்.

இனி எப்ப இந்தியா வரக்கிடைக்குதோ கிடைச்ச சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பது அவள் தாரக மந்திரம்.

அப்பா ஒரு சாமான் வாங்க மறந்து போனன் ஐயோ இன்னுமா அச்சத்துடன் அவளைப் பார்க்கிறேன்.

மல்லிகைக் கண்டு வாங்கவேணும்.

ஏன் அங்க வளவு முழுக்க நட்டு வச்சிருக்கிறது காணாதோ.

எனக்கு மதுர மல்லிவேணுமப்பா குண்டு குண்டா நல்ல வாசமா இருக்கும்.

சந்திரா ஒரு மல்லிகைப் பைத்தியம். அந்தி சாயும் பொழுதுகளில் எமது வளவு முழுதும் நிறைந்திருக்கும் மல்லிகையின் சுகந்த வாசனைக்கு சொந்தக்காரி இவள். கொடியாக செடியாக எங்கும் நிறைந்து பூத்துச் சொரியும் அழகில் எமது

வீடே தெய்வீக களைகட்டும். அண்மைக்காலமாக மதுரைமல்லி வேண்டும் என்று அடம்பிடித்துக் கொண்டிருக்கும் இவளுக்கான வாய்ப்பு இது.

"கோயம்பேடு" சந்தையின் சனத்திரளுக்குள் தொலைந்து போகாமல் சந்திரா என் கரங்களைப் பற்றிக் கொண்டு இழுபட்டுக் கொண்டே வருகின்றாள். கண்கள் மதுரை மல்லிச் செடியைத் துழாவிக் கொண்டே வருகின்றன. குறுக்கும் மறுக்குமாகச் செல்லும் மக்களையும் வியாபாரிகளையும் இரைச்சலையும் சட்டை செய்யாமல் முன்னேறிக் கொண்டே இருக்கின்றோம்.

ஆ.. அத்தா.. அத்தா.. இருக்கு

சந்திராவின் குரலில் ஆக்கிமிடீசின் சந்தோஷம் தொனிக்கிறது. பேரூந்து தரிப்பிடத்தின் தூண் ஓரமாக அறுபதுவயதைத் தாண்டிய தலை நரைத்துப் போன பெண்மணி. அவளைச் சுற்றி வித விதமான அளவில் மல்லிகைச் செடிகள்.

சந்திராவின் கைகள் ஆவலோடு செடிகளைத் தடவுகின்றன.

"அம்மா இது என்ன விலை"

இருவத்தஞ்சி ரூபா எத்தின வேணும்

"ஒரு நாலஞ்சு வேணும் கனக்க கொண்டு போக ஏலாது. நான் பதிலில் முந்திக் கொள்கிறேன்.

எமது உரையாடலில் வித்தியாசத்தை அந்தப் பெண்மணி உணர்ந்திருக்க வேண்டும்.

"நீங்க எந்த ஊரு கேரளாவா?

இல்ல நாங்க ஸ்ரீலங்கா

ஓ...அங்க கொண்டு போகப் போறீங்களா?... கேட்டுக் கொண்டே அவளின் கைகள் நல்ல செழிப்பான செடிகளைத் தெரிவு செய்யத் தொடங்கின.

"மேல் பக்கத்த கட் பண்ணித் தாங்கோ அம்மா பிளைற்றில கொண்டு போகவேணும். இது நான்

கிழவியின் கைகள் அந்த வாளிப்பான கன்றுகளை ஒரு முறை தடவித் தயங்குகின்றன. வெட்ட மனமில்லாமல் இருக்கு என்று கூறியவாறே அவற்றை இரண்டாக மடித்து பைக்குள் திணித்துத் தருகின்றாள். இன்னும் இரண்டு கள்றுகளைத் தூக்கி என் மனைவியின் கரங்களுக்குள் வாஞ்சையோடு வைக்கின்றாள்.

"இது நான் பிறியா தாரேன் கொண்டு நட்டுப்பாருங்க அப்புறம் சொல்லுங்க

ஏதோவேத வாக்கைக் கேட்டது போல என் மனைவி ஆமோதித்துப் பூரித்துப் போகின்றாள். நீண்ட காலம் பழகிய தோரணையில் அப் பெண்ணிடம்

பிரியாவிடை பெற்றுக் கொண்டு நடக்கத் தொடங்குகின்றோம். மதுரை மல்லி கனவு பலித்துப் போன நிறைவில் என் சந்திராவின் முகத்திலும் நடையிலும் பூரிப்புத் தென்படுகின்றது.

பஸ் நிலையக் கும்பலுக்குள் புகுந்து கரையத் தொடங்குகிறோம். அந்தக் கணப்பொழுதில்

நில்லுங்கோ உங்களைத்தான் பிள்ள

முதுகுக்குப் பின்னால் அழைக்கும் குரலுக்கு திரும்புகின்றோம்.

அந்த மல்லிகைச் செடி அம்மா எம்மை நோக்கி ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டருக்கிறார். எம் அருகே வந்துவிட்ட அவருக்கு மூச்சு இரைக்கின்றது.

:ஐயோ எவ்வளவு தூரம் மனிசி ஓடிவந்திருக்கு. அவர் கையில் இன்னும் இரண்டு மல்லிகைச் செடிகள், என் மனைவியை நோக்கி அவை நீளுகின்றன.

"இது ஜாதி மல்லிகை கொண்டு போய் நடு புள்ள நான் சொல்லுறன் நல்லாவரும். என் கைகள் ஐம்பது ரூபாய்த் தாளை எடுத்து நீட்டுகின்றது. தம்பி காசு வேணாம் அது என் அன்பளிப்பு என் ஞாபகம் இருக்கும் போய்ற்று வாங்கோ.

அந்த பஸ் நிலையத்தில் நின்ற பெரும்பாலான கண்கள் எம்மை மொய்க்கத் தொடங்குகின்றன. எதுவித எதிர்பார்ப்பும் இன்றி திரும்பிப் பார்த்து கையசைத்துச் செல்லும் அந்த வயோதிபப் பெண்மணி பற்றிய வியப்பில் என் விழிகள் அவள் மேல் நிலைக்கின்றன. என் மனைவியின் கண்கள் பனிக்கின்றன.

விமானப் பணிப் பெண் வெற்றுத் தட்டுக்களை சேகரிக்கத் தொடங்கிவிட்டாள். வெண்பொங்கல், சம்பல், சாம்பார், நறுக்கிய பழத்துண்டுகள் இன்னும் ஏதேதோ குட்டிக் குட்டி டப்பாக்களில் வாசனையும் அழகும் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் சந்திராவின் கைப்பக்குவத்தின் முன்னே இவை எம்மாத்திரம்.

சந்திராவை மெல்லத் தட்டுகின்றேன். இந்த ஒரு மணித்தியாலப் பயணத்தில் தான் கண்களை மூடிக் கனவு காணவேண்டும் என்று சபதம் எடுத் திருப்பாள் போல

இந் தப் பிடிவாதத்தை பொ ருட்களைப் பொதி செய்யும் போது காட்டியி ருந்தால் இப்படி ஆகி இருக்குமா?

இரவு பயண ஏற்பாடுகளைச் செய்யும் போது இந்த மல்லிகைச் செடிகள் தான் பூதாரமாக எழுந்து நின்றன. செடிவகைகளை பிளேனில் கொண்டு போக ஏலாது விடமாட்டாங்கள்.

அப்ப களவாத்தான் கொண்டு போகவேணும் லக்கேஜில் போடுங்கோ பாக்க மாட்டாங்கள்.

என் மனைவியின் ஆலோசனை எனக்குச் சரியாகப்படவில்லை. அப்போது தான் எனக்குள் முளைத்து நின்ற அரிச்சந்திரன் வேண்டாம் என்று மறுத்து விட "கையில வெளிப்படையா கொண்டு போவம் கனக்க இல்லத்தானே விடுவாங்கள். எனக்குள் நானே தீர்மானித்துக் கொள்கிறேன்.

இல்ல உடுப்பு பெட்டிக்க சுத்தி வையுங்க பார்க்கமாட்டாங்கள்.

மீண்டும் மனைவியின் வார்த்தைகளைப் புறக்கணித்து

உள்ள வச்சால் வாடிப் போகும் கையில் கொண்டு போவம் எடுக்க மாட்டாங்கள் எடுத்தால் எடுக்கட்டும் ஏதோ ஒரு நம்பிக்கையில் விமான நிலையம் வந்த என்னிடம் அந்த அதிகாரிகள் தடுத்து விட்டது அந்த மல்லிகைச் செடிகளை மட்டும் தான். என் நம்பிக்கை தவிடு பொடியாக அசடுவழிய சந்திராவைப் பார்க் கின்றேன். அவள் முகத்தில் எள்ளும் கொள் ளும் வெடிக்கத் தொடங்கு கின்றது.

இதோ.. பத்து நிமிடத்தில் விமானம் தரை இறங்கப் போகின்றது. இருக்கைப் பட்டிகளை இணைத்துக் கொள்ளும்படி விமானப் பணிப்பெண்கள் அறிவிக் கின்றனர். சந்திரா நிமிர்ந்து இடுப்புப்படியை இணைத்துக் கொள்கிறாள்.

இலங்கை நாட்டின் தென்னை மரங்கள் தெரியத் தொடங்குகின்றன. கட்டிடங்கள் பெட்டி பெட்டியாக அழகு செய்கின்றன. பார்க்க மறுத்த வான்காட்சிகளை இப்போதாவது அவள் பார்க்கட்டும்.

சந்திராவைப் பார்க்கின்றேன் அவளும் என்னைப் பார்க்கின்றாள். அவள் கண்கள் குளம் கட்டிக் கொண்டிருக்கின்றன.

ஒரு மணித்தியாலம் லக்கேஜில் கிடந்திருந்தால் வாடியா போய்யிருக்கும் அந்த அம்மா பாவம் களைக்க களைக்க ஓடி வந்து தந்து.

பொடுக் கென்று குளம் உடைந்து சொரியத் தொடங்குகின்றது. ஓ.. எனக்கு புரியத் தொடங்குகின்றது. இவள் மதுரை மல்லிக்காக அழவில்லை. அந்த அம்மா கொடுத்த ஜாதி மல்லிகைக்காகவும் அழவில்லை அந்த அம்மாவின் அன்பையும் எதிர் பார்ப்பையும் மதிக்க வேண்டிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டதற்கா அழுகின்றாள்.

பொம்மையைத் தவறவிட்ட குழந்தையாக தவிக்கும் அவள் கரங்களை இறுகப்பற்றிக் கொள்கிறேன். ஜாதி மல்லிகையாகப் பூத்துக் கமழும் என் சந்திராவை ஆரத் தழுவிகொள்ள என் மனம் துடிக்கின்றது.

விமானத்தின் பயணிகளையும் பொருட்படுத்தாமல் அவள் நெற்றியில் முத்தமிடுகின்றேன்.

# அண்மைக்காலத்தில் வெளிவந்து எம்கரம் கிடைத்த நூல்கள்

**"சங்கமும் தமிழும்"**
ஆசிரியர்: தமிழ்மணி அகளங்கன்
விலை: 300/-

**"இடவிளக்கவியற் தேசப்படத்திற்கு ஓர் அறிமுகம்"**
ஆசிரியர்: பவிதன்
விலை: 250/-




**"என் இதயம் பேசுகிறது"**
ஆசிரியர்: புங்குடுதீவு டயான்
விலை: 300/-

# ஈழம் தந்த கொடை அண்ணை றைற் - பாலச்சந்திரன்

ந.பார்த்தீபன்

"ஒரு பேரூந்து நடத்துநரின் அன்றாடப் பணியின் அவஸ்தைகளை உரைச்சித்திரம் கலந்து வரிக்கு வரி ரசிகர்களை (வார்த்தைக்கு வார்த்தை) வாய் விட்டுச் சிரிக்கும் வகையில் இவர் அமைத்திருந்த பாணி நமது இலங்கைக் கலையுலகத்துக்கு ஒரு புதிய அறிமுகமாய் அமைந்திருந்தது. தனது பிரதியை தானே தயாரிக்கும் ஆற்றலை அந்த நாளிலேயே கொண்டிருந்தவர். பின்னாளில் படைப்பாற்றல் மிகு எழுத்தாளராகப் பரிமளித்ததில் வியப்பில்லை" என்று அமரர் கே.எஸ்.பாலச்சந்திரனின் சமகால கலையுலக நண்பரும் தமிழ் கூறும் உலகறிந்த அறிவிப்பாளரும் பல்கலைத்திறன் மிக்கவருமான பி.எச் அப்துல் ஹமீட் குறிப்பிட்டது. வெறும் புகழ்சியல்ல.

தனி நடிப்பு என்கிற திறன் ஓர் அபாரத்திறன். இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன் இந்தத் தனி நடிப்பு என்பது மிகவும் வரவேற்பைப் பெற்றிருந்தது. அதில் சோபித்து பெரும் ரசிகர் கூட்டத்தைப் பெற்று நீண்ட காலம் கோலேச்சியவர் கே.எஸ். பாலச்சந்திரன். அண்ணை றைற் என்கிற தனி நடிப்புக்கு கிடைத்த வரவேற்பு தொடர்ந்தும் நாளை நமது, மத்தாப்பு போன்ற நிகழ்ச்சிகளை அன்னாரைச் செய்ய வைத்தது, அண்ணளவாக ஒரு மணி நேர தனி நடிப்பு மணியண்ணை என்கிற ஓட்டுநரை கற்பனையாகக் கொண்டு பேருந்தில் நடைபெறும் பல்வேறு சம்பாசனைகள் பல குரலில் இன்று மிமிக்கிரி என்று பிரபல்யப்படுத்தப்படுகிறது. பேசி, நடித்து, குறிப்பாக சிரிக்கவும் சிந்திக்கவும் செய்து சமகால நடப்புகளை எடுத்துரைக்கும் பாங்கு நினைவில் நிற்கிறது.

அன்று, அந்தத் தனிநடிப்பு என்பது இலங்கைக் கலையுலகத்துக்கும், ஏன் இலக்கிய உலகத்திற்கும் ஒரு புதிய அறிமுகம். சிறந்த கலை - இலக்கிய முயற்சி இந்தப் பிரதியைத் தயாரிக்கும் ஆற்றல் படிப்படியாக வளர்ந்து கிராமத்துக் கனவுகள் என்ற நாடகத் தொடரை உருவாக்க வைத்தது, வசனங்களில் இயல்புத் தன்மையும் உயிரும் கலந்த எழுத்துக்களால் வானொலி நாடக இரசிகர்களை ஒன்றிணைப்போகச் செய்தவர். வாத்தியார் வீடு, கரையைத் தொடும் கட்டுமரங்கள் போன்ற நெஞ்சை விட்டகலாத இலக்கியங்களைப் படைத்தவர்.

தினகரன், வீரகேசரி வார இதழ்களில் மலர் எனும் புனை பெயரில் எழுதிய சிறுகதைகள், சிரித்திரன் இதழில் எழுதிய சிறுதைகள் பின்னாளில் புலம்பெயர்ந்த மண்ணில் வெளிவரும் பத்திரிகைகள், மற்றும் சஞ்சிகைகளில் எழுதிய கட்டுரைகள் என இவரது எழுத்துப்பணி அவர் இறைவனடி சேரும் வரை தொடர்ந்து கொண்டேயிருந்தது.

இலங்கை வானொலியில் கலைக்கோலம், விவேகச் சக்கரம், கலைப்பூங்கா போன்ற நிகழ்வுகளைத் தொடர்ந்து செய்துள்ளார். இந்த நிகழ்வுகளில் பல இலங்கை ஆளுமைகளை அறிமுகம் செய்ததோடு அவர்களுடைய ஆற்றலை, அனுபவத்தை அறிவை இரசிகர்களும் பெற வாய்ப்பளித்தார். இந்நிகழ்வு களினூடாக பலரை அறிமுகம் செய்து இனங்காட்டினார்.

புலம் பெயர்ந்த நிலையிலும் கனேடிய வானொலியில் "மனமே மனமே" ஓல்ட் இஸ் கோல்ட் (Old is Gold) போன்ற நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும் முத்திரை பதித்தவர் கே.எஸ். பாலச்சந்திரன் கனேடிய தொலைக்காட்சியில் இவர் வை.ரி.என்னும் பத்திரமாய் உருமாறி நேர்முகம் காணும் நகைச்சுவைத் தொடரை செய்துள்ளார். இந்நிகழ்ச்சியில் நகைச்சுவைத் தொடரில் நானும் கலந்து கொண்டு உரையாடிய போது சாதாரணமாக நகைச்சுவை உணர்வுடன் பேசத்தெரியாத எனக்கும் கூட நகைச்சுவை உணர்வினைப் பொங்கிப் பிரவாகிக்க வைத்தவர் பாலா என பி.எச்.அப்துல் ஹமீட் குறிப்பிட்டுள்ளமை கே.எஸ் பாலச்சந்திரனின் ஆளுமையைப் பறைசாற்றும்.

பன்முகக் கலைஞர் பாலா வானொலி தொலைக்காட்சி, மேடை, திரைப்பட கலைஞர், நேர்முக வர்ணனையாளர் (சிறுகதை திரைக்கதை நாவல் கட்டுரை) எழுத்தாளர் / திரைப்பட இயக்குனர், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர், தொகுப்பாளர் இருந்தும் தன் வித்தைச் செருக்காய் கொள்ளாமல் பண்போடு பழகும் பக்குவம் தெரிந்தவர் எனப் பலராலும் பாராட்டப்பட்டவர் கே.எஸ் பாலச்சந்திரன்

உலகளாவிய ரீதியில் இவர் எழுதிய "கரையைத் தேடும் கட்டுமரங்கள்" என்ற நாவல் வாசகர்களைச் சென்றடைந்தால், சிறந்த படைப்புகளைச் சீர்தூக்கிப் பார்த்து விருது வழங்கி கௌரவிக்கும் ஆய்வாளர்கள் கையில் இந்நூல் சென்றடைய ஆவன செய்தால் நிச்சயம் இது சிறந்த படைப்பிலக்கிய நாவலுக்கான அங்கீகாரம் பெறும் எஸ். பாலச்சந்திரனுக்கு கிடைக்கும் அங்கீகாரம் நமது மண்ணுக்குப் பெருமை தேடித்தரும் என விமர்சகரால் கூறப்படுகிறது.

தன் எழுத்தால் பயன்படுத்தும் சொற்களால் வரிகளால் வாசகரின் உள்ளத்தில் காட்சிகளை விரியச் செய்து சூழலுக்கு அழைத்துச் செல்லக்கூடிய ஆற்றல் கொண்ட ஒரு சிறந்த எழுத்தாளர் இவர்

நாடுபோற்ற வாழ்க. நான் உங்கள் தோழன் அவள் ஒரு ஜீவநதி, வாடைக்காற்று ஷர்மிளான் இதயராகம், அஞ்சனா (சிங்களம்) பிளென்டிங்ஸ் (ஆங்கிலம்) ஆகிய இலங்கைத் திரைப்படங்களில் இவர் பதித்த தடங்கள் தனித்துவமானவை. அவற்றில் தன்னிகரற்றது வாடைக்காற்று / திரைப்படத்தில் இவர் ஏற்ற பாத்திரம் அந்தப் படத்தைப் பார்த்து மேஜர் சுந்தரராஜன் பாலாவின் நடிப்பை வியந்து பாராட்டினர்.

தெனாலி படத்தில் தெனாலி பாத்திரத்துக்கு, தமிழக மக்களுக்கு புரிகின்ற வகையில் சொற்களையும் உச்சரிப்பையும் மாற்றியமைத்து யாழ் மொழி வழக்கின் சாயலை மட்டும் காட்டும் வகையில் பங்களிப்புச் செய்தது. கே. எஸ்சினுடைய யாழ்மொழி வழக்கில் அமைந்த நாடகங்களின் ஒலிப்பேழைகள் தான் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு பல தனித்துவங்கள் கொண்ட பன்முக ஆளுமை கே.எஸ். பாலச்சந்திரன் அவர்கள் ஈழம் தந்த கொடை என்பதில் எதுவித ஐயமில்லை.

# மாணவர் பக்கம்

## உதவி செய்வோம்

செடி கொடிகள் பயிர்களுக்கு
நீரை ஊற்றலாம்
வீடு வாசல் கூட்டி தினம்
சுத்தம் செய்யலாம்

அடுப்படியில் அம்மாவுக்கு
உதவி செய்யலாம்
ஆடு மாடு கோழிகளை
அன்பு செய்யலாம்

படிக்கும் மேசைப் புத்தகங்கள்
அடுக்கி வைக்கலாம்
பாட்டி செய்யும் வேலையிலே
பங்கு போடலாம்

எவ்வளவோ செய்வதற்கு
இருக்கும் போதிலே
ஒன்றுமில்லை என்று கண்ணன்
சோம்பித் திரிகிறான்

## அமுதநதி நெஞ்சங்கள்

வாசகர்களிடமிருந்து இன்னும் பல கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். உங்களுடைய கருத்துக்கள் ஒன்றே அமுத நதியை பரந்து பலமணங்களையும் சென்றடையச் செய்யும் என்பது திண்ணம். எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# இணையமும் மாணவர்களின் சுய கற்றலும்




இணைய உலகில் சுய கற்றல் என்பது மாணவன் கிடைக்கின்ற நேரங்களில் இணையவெளிகளில் உலாவுவதோ அது தொடர்பான அறிவுடன் திகழ்வதோ எந்த நேரமும் இணையஉலாவுகை பற்றி தினமும் கதைப்பதையோ சொல்ல முடியாது. கற்றல் என்பது ஒருவன் தனக்கு கிடைக்கின்ற அனுபவங்களின் மூலம் மனப்பாங்கில் ஏற்படும் மாற்றம் அறிவில் ஏற்படும் மாற்றம் திறனில் ஏற்படும் மாற்றம் இவ்வாறான மாற்றத்தினால் அவனது நடத்தையில் ஏற்படுகின்ற நிரந்தரமான மாறுதலே கற்றல் எனப்படும். மாணவன் ஒருவனுக்கு சுய கற்றல் செயற்பாடு திறமையாக மேற் கொள்ள இரண்டு ஊக்கிகள் முக்கியமானதாக காணப்படுகின்றது.

**01. அகஉத்தி**

அக ஊக்கி எனப்படுவது மாணவனின் உள்ளார்ந்த உணர்வுகள் மூலம் கற்றலின் தேவை, ஆசை, மனப்பாங்கு என்பவை ஏற்படுவதாகும். இவ் உந்துதல்களால் கிளர்ச்சியடையும் மாணவரே சிறந்த கல்விமானாக திகழ்கின்றனர் என்பது வரலாறு கண்ட உண்மை. உதாரணம்.

சுவாமி விவேகானந்தர், டாக்டர் அப்துல் கலாம் போன்றவர்களாவர்.

**02.புற ஊக்கி**

இது புறத்தே இருந்து தூண்டப்படும் உந்துதல்களாகும். இது ஆசிரியர் மூலமோ அல்லது சக பாடிகள் மூலமோ மாணவனுக்கு ஏற்படுத்தும் உந்துதல்களாகும். இப் புற உந்துதல்கள் மாணவனின் வேகத்தை சில மணி நேரங்களோ சில நாட்கள் மட்டுமே தொழிற்படும் இவ்வேகம் குறைய இவ்விடயமே மாணவனின் கற்றலுக்கு தடையாக அமைந்துவிடும்.

**இணையமும் மாணவரும்**

19ம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பட்ட கணனி பெரிய நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலிருந்து 20- 21ம் நூற்றாண்டுகளில் அனைவரினதும் கைகளில் புரள்கின்றது. இதனால் இணையப்பாவனை ஒரு நொடிப் பொழுதில் மில்லியன் விடயங்களை தேடக்கூடிய ஆற்றலை அனைவருக்கும் வழங்குகின்றது. இன்று இணையம் மின் இதழ், மின்நூல், மின் நூலகம், மின் களஞ்சியம், இணையவழி பல்கலைக்கழகம், இணையவழி மன்றம், என பல திட்டங்களை தன்னுள் கொண்டுள்ளது. இதனை எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள்? இதனால் மாணவர்களின் அடைவு என்ன? இது மாணவரின் அடையாளமாகுமா? என்பன இன்றைய ஆசிரியரின் கேள்வியாகும்.

மாணவர்கள் இணையம் மூலம் அடைய முடியாது என முன்னர் நினைத்த உயரத்தை எல்லாம் இன்று அடைந்து வருகின்றார்கள். இதற்கு உதாரணமாக யூனிக்கோட் எனும் இணையவழி நிர்வாக அமைப்பில் தமிழ் மொழிக்கு 128 இடங்கள் வழங்கப்பட்டுள்ளமையை குறிப்பிடலாம் இணைய வழியில் சுய கற்றலை மேற்கொள்ள விளையும் மாணவனுக்கு பின்வரும் அம்சங்கள் இருக்க வேண்டும் என்கின்றார்கள் கல்வியாளர்கள்.

**01. நேர் சிந்தனை**

மாணவன் தன்னால் இணையத்திலிருந்து வெற்றிகரமாக கற்க முடியும், இணையக் கல்வி சிறப்பானது, இணையவழிகளை தேடமுயன்று கற்பேன், என்னைத் தினமும் இற்றைபடுத்திக் கொள்வேன், தவறான இணைய வழிகளை தேடமுயலமாட்டேன் என்னும் நேர்வழியான சிந்தனை மாணவனிடம் காணப்பட வேண்டும்.

**02. சுய பிரதிபலிப்பு**

இணையவெளிகளில் நான் தேவையற்றதைக் கற்றுக் கொள்கிறேனா?

இணையம் போதுமான தகவலை தருகின்றதா?

கூடிய நேரம் இணையத்தில் உசாவி குறைந்த விடயத்தைக் கற்கிறேனா?

எனக்குக் கிடைக்கும் நேரங்களில் கற்றல் உலவுகையை செய்கின்றேனா? என்பவற்றை தன்னைத்தானே கேட்டுக் கிடைக்கும் விடயத்தைக் கொண்டு கற்றல் செயற்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும்.

03. உடன்படான உளவியல் நடத்தை

மாணவன் தனது நடத்தைக் கோலங்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வெளிப்படுத்த வேண்டும். தனது தேவைகளிற்கு மட்டும், தேவையினை தீர்ப்பதற்கு மட்டும் இணையத்தைப் பயன்படுத்தல் மாணவர் இணைய சட்ட திட்டங்களை மதித்தல் வேண்டும்.

04 மற்றவரின் உதவியோடு வெற்றிபெறல் சுயகற்றல் என்றாலும் தனித்து எல்லா விடயங்களையும் செய்யமுடியாத காரியமாகும். எனவே ஏனையவர்களினதும், சகபாடிகளதும் ஒத்துழைப்பைப் பெற்று, ஏனையவர்களுக்கு உதவி செய்தல் எனும் மனப்பாங்கோடுசெயற்பட வேண்டும்.

இவ்வாறாக செயற்பாடுகளின் மூலம் மாணவர் சுயகற்றலை மேற்கொள்ள முடியும். இவ்வாறான செயலாற்றுகையின் மூலம் வினைதிறன் உள்ள வகையில் கற்றலினை மேற்கொள்ள முடியும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

சு.பரமானந்தம், பொ. சத்தியநாதன், (2012) வகுப்பறையில் முகாமைத்துவம், சுபம் வெளியீடு, கோவில் வீதி குருமன்காடு, வவுனியா.

நா. சத்தியவேந்தன் (2012) தமிழியற் கட்டுரைகள், புகழ் வெளியீடு, யாழ்ப்பாணம்.

## சுடாதே..

நிர்மலமான வாழ்க்கை
நித்தமும் தோன்றும்
நினைவுகள்
வருடிச் செல்லும்
காற்றாக
வாட்டி வதைக்கும்
புயலாக
வசந்தமாய் என்
வாழ்வில்
வந்தாய் வசம் வீசினாய்
வசீகரித்தாய்
இன்றோ வம்பு பேசி என்
வாழ்க்கையின்
மலர்களைச் சுட்டெரித்தாய்
உனக்காக
வாடியதை விட
வேறென்ன செய்தேன்.

கே. தங்கராஜா

## ஓர் உடல்

உணர்வற்று...
உருக்குலைந்து...
உலகத்தை விடைபெற
காத்துக்கிடக்கிறது....
உயிர் ஜீவன் அதை
தன் கைக்குள்
இறுக்க பிடித்துக்கொண்டு

சுருங்கிய தோல்கள்
வெளிறிய முடிகள்
தவறிய பற்கள்....
பலம் இழந்து
குரல் தளர்ந்து
தனிமையை வரம் வாங்கி
தலை சாய்ந்திருக்கும் தாய்.....

விழுமுறைக்கு மட்டும்
நலம் விசாரிக்கும்
நாடக அன்பை
உணர்ந்தும் உணராமல்
தாய்மையின் தவிப்புடன்
காத்துக்கொண்டிருக்கிறது
முதியோர் இல்லத்தில்

-லாவண்யா-

# முற்றத்து மல்லிகை

நேர்காணல்: அன்ரனி குரூஸ்

ச.அருள் ஞானதீபன்

கர்ப்பிணி மாதா

பிரதேசத்தின் விழாக்களிலும். வரவேற்பு நிகழ்வுகளிலும் அலங்காரமாகவும் நேர்த்தி, நுணுக்கம், கலையுணர்வோடு நிறுவப்பட்டிருக்கும் அலங்கார வரவேற்பு வளைவுகள், சிகரங்களுக்குச் சொந்தக்காரர் வவுனியா செட்டிகுளம் வேப்பங்குளத்தைச் சேர்ந்த திரு சந்தாம்பிள்ளை அருள்ஞான தீபன் அவர்கள்.

சித்தவைத்தியர்கள், புலவர்கள், மாந்திரீகர்கள் என்று புகழ்பெற்ற கலைப்பாரம்பரியத்தைக் கொண்ட இக்கிராமத்தில் அக்கலைகளைப் போற்றுவாரும் வளர்ப்பாரும் அருகிப் போய்விட்ட நிலையில் இன்று அந்தப் புலமைப் பாரம்பரியத்தின் பத்தாவது தலைமுறையினரில் இயல்பாகவே ஒரு சில கலையாற்றல்கள் ஒட்டிக் கொண்டுள்ளன.

அந்த வகையில் கண்கண்டதை கை செய்யும் ஆற்றலுடன் பிரமாண்டமாக எழுந்து நிற்கும் அலங்கார வளைவுகளில் தன் கலைத் திறனை நிரூபித்து நிற்பவர் அருள்ஞானதீபன்(லெஸ்லி) அவர்களாவார். இவரின் ஊரில் நிகழ்ந்த விழா ஒன்றில் நல்லையா (சுவாம்பிள்ளை) என்பவர் அமைத்த நுழைவாயில் சிகரம் தனது ஆவலைத் தூண்டியதாகக் கூறும் இவர் அதனை மனதில் வைத்து ஆரம்பத்தில் சிறிய சிகரங்களையும், பின்னர் பெரிய சிகரங்களையும் அமைக்கத் தொடங்கியதாகக் கூறுகின்றார்.

பாப்பரசரின் மடுத்திருத்தல வருகை, கவிராயர் சிலை திறப்பு விழா, மற்றும் குருப்பட்டங்கள், வரவேற்பு விழாக்கள் போன்றவற்றில் இவர் அமைத்த அழகுச்சிகரங்கள் குறிப்பிடத் தக்கன. ஆயிரக்கணக்கான ஆணிகள், நறுக்கிய ஓலைகள், பலகைத் துண்டங்களோடு நிமிர்ந்து நிற்கும் சிகரங்களின் அழகை இரசிப்பவர்களுக்கு இதில் அடங்கியுள்ள தனிமனிதன் ஒருவரின் உழைப்பும் சிரத்தையும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.



இயல்பாகவே கற்பனைத்திறனும், கலைத் திறனும் கொண்ட இக்கலைஞனுக்கு மரத்தில் சிற்பங்கள் செதுக்கும் இன்னொரு முகமும் இருக்கிறது. இக்கலையும் கண் பார்க்க கைசெய்ய தானாகக் கற்றுக் கொண்டது தான். 1990களில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் போது மடுத்திருத்தலத்தை வசிப்பிடமாக்கிய போது இவரை இனங்கண்டு கொண்ட விடுதலைப்புலிகள் இவரின் திறமையைப் பயன்படுத்தினர். முதிரை மரத்தில் இவர் அமைத்த நட்சத்திரங்கள், கப்பலுடன் கூடிய கேணல் கிட்டுவின் புடைப்புச்சிற்பம் சிறப்பு வாய்ந்த தாக அமைந்தது.

யேசுவை கற்றூணில் கட்டிய உருவம், அன்னை தெரேசா, கர்ப்பிணி மாதா, புனித அந்தோனியார், புனித சூசையப்பர், கர்த்தர் போன்ற திருவுருவங்களை வழிபாட்டிற்காகச் செதுக்கிக் கொடுத்துள்ளார். குழந்தைப்பேறு இல்லாத நபர் ஒருவரின் வேண்டுதலின் பேரில் அமைத்துக் கொடுக்கப்பட்ட கர்ப்பிணி மாதா உருவம் இலங்கையில் அரிதாக உள்ள சிற்பங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

(31ஆம் பக்கம் பார்க்க...)

# "மனோன்மணியம்" காட்டும் கல்வியியல் சிந்தனைகள்

திருமதி.பத்மாவதி ஜெயச்சந்திரன்

தமிழ் இலக்கியங்கள் பேசும் விடயங்கள் பற்றிய சிந்திப்புக்களை தமிழ்ச் சமூகம் வெளிக் கொணராத வரையில் மேலை நாட்டுக்கல்வியும் அவற்றின் சிறப்புக்களும் பற்றி மழைக்கால பொக்கான்கள் போல பலரும் வெளிப்படுத்து வதுண்டு. எமது பண்டைய இலக்கியங்கள் கூறும் கல்வியியற் சிந்தனைகளை ஆழமாக ஆராய்வது காலத்தின் தேவையாகும். மரபுகள், வழக்காறுகளில் மாற்றங்கள் நிகழலாம். ஆனால் மரபும் வழக்காறும் மாறாது. அந்த வகையில் மனோன்மணியம் காட்டும் கல்வியியல் சிந்திப்புக்கள் பற்றிய பார்வையாக இக்கட்டுரை அமைகின்றது.

நவீன கல்வியியலாளர்கள் கருத்துக்கள் தெரிந்த விடயங்களிலிருந்து தெரியாத விடயங்களையும் அறிந்து அனுபவ ரீதியாக கற்றலை மேம்படுத்துவதாகும். Unkown நிலையிலிருந்து Know நிலைக்கு மாறுவது காலத்தின் கட்டாயம் ஆகும்.



மாணவர் மைய வகுப்றைச் செயற்பாடுகளில் இவ்வம்சம் முக்கியமானது மட்டுமன்றி, உட்படுத்தற் கல்வியிலும் இது முக்கியம் பெறுகின்றது. இதனை மனோன்மணியம் இவ்வாறு கூறுகிறது.

"தெளிந்தவை கொண்டு தெளி தற்கு அரியவை
உளந்தனில் நம்பி யுறுதியா ய்ப் பிடித்துச்
சிறிது சிறிது தன் அறிவினை வ ளர்த்தே
அனுபவ வழி யாய் அறிவதை அன்றோ. (222 பக்) 111ம் அடி - 1116 வரை

ஆய்வுகள் யாவும் ஏதோ சிந்திப்பு, கிரகித்தல், செயலொழுங்கு பற்றிய தெளிவுடன் இடம் பெறுகின்றன. ஆய்வுகள் புலமையாளர்களால் செய்யப்படுகின்றன.

விஞ்ஞான பூர்வமான சிந்தனையினை கூறவந்த மனோன்மணியம்

"ஒரு கால் கருணகாரியம் காண்குவம் அல்லேம்

யார் இவை யனைத்தும் ஆய்ந்திட வல்லார்." என்கிறது.

கற்றல் - கற்பித்தலின் போது ஊக்கல் என்பது பிரதானமானது நேர் ஊக்கல், மறை ஊக்கல் பற்றிய கருத்தாடல்கள் பிரதானவை. கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்தவும், ஆசிரியர் மாணவர் இடைத் தொடர்பை வலுப்படுத்தவும், வகுப்பறைச் செயன்முறைகளை விரிவுபடுத்தவும், ஊக்கல் முக்கியம் பெறுகின்றது. மனோன்மணியம்

"உளமது கைவிடா ஊக்கம் ஒருவனது

ஆக்கத்து அளவெனத் துணிவார்க்கு"

என்று உரைக்கின்றது.

நேர முகாமைத்துவம் என்பது வாழ்வினதும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினதும் முறையான செயலொழுங்கு வழிகாட்டுவது. நேரம் தான் திட்டமிடலின் ஆணிவேர். நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்தும் போது வினையாற்றல் மேம்பட்டு வினைத்திறனும், விளைதிறனும் உச்சநிலை அடைகிறது. இவ்வாறாக நேரம் பற்றி மனோன்மணியம்

"காலம் காற்றினுங் கடுகிய கடுநடையுடையது" என்கிறது.

(61ம் அடி)

மாற்றமுறும் சமூகத்தின் தேவைகள் நொடிப்பொழுதில் மாறிக்கொண்டி ருக்கின்றன. இத்தேவைகள் பல்வகைப்பட்டன. குறிப்பாக கல்வித் தேவையா னது அதன் உள்ளடக்கம், தரம் என்ற வகையில் மாற்றப்பட வேண்டியதாக அமைகிறது. இங்கு கலைத்திட்ட சீர்திருத்தங்கள், கல்விச் சீர் திருத்தங்கள் குறிப்பிடத்தக்கன. இதனை மனோன்மணியம்

"தத்தமக்கு உற்ற மதித்திறம்

எட்டிய மட்டுங் குற்றம் விடுத்துக்

காலகதிக்கு அனுகூலமாய் நவீன

சீர்பல திருத்தி ஓர் இயல் புதிதாய் நாட்டித்

தமது நாட்டுளோர் சுகம் பாராட்டிலரேல் . (அடி 67-72)

என்று இயம்பியுள்ளமை கவனத்திற்குரியது.

இவ்வாறான பல்வேறு கல்விசார் அம்சங்களைக் கொண்ட மனோன்மணியம் இவற்றுக்கெல்லாம் மகுடமாக விளங்கும் ஆசிரியர் தொடர்பிலும் கருத்தை முன்வைத்துள்ளது.

"தந்தை தாய் ஆதியா வந்த தன் குடும்ப

பந்த பாரத்தினைப் பேணித் தனது

சொந்தமாம் இச்சைகள் துறந்து மற்றவர்க்கு

எந்நாளும் சுகம் இயைந்திடக் கடமையின்

முந்துகின்றவரே முதல் தவமுனிவர்"

(4ம் அங்கம் 132-136)

என்கிறது ஆசிரியப் பணியானது அறப்பணியாகும். முனிவரானவர் எவ்வாறு மற்றவர்களுக்காகவும், நாட்டு நலனுக்காகவும் தவம் இருக்கிறாரோ அதனைப் போன்றவர்களாக ஆசிரியரைச் சிறப்பித்துள்ளார். இங்கு ஏழு பிறப்பும் பின்தொடரும் அழியாச் செல்வமாகிய கல்வியை முனிவரான ஆசிரியராலேயே உரியபடி கொடுக்க முடியும் என்பது மனோன்மணிய ஆசிரியரது திடமான நம்பிக்கை என்பது புலனாகிறது.

இவ்வாறாக கல்வி தொடர்பான சிந்திப்புக்கள் தமிழ் இலக்கியங்களிலே பரந்து விரிந்து காணப்படுகின்றன. கல்வியின் சிறப்பம்சங்களான கற்பிக்கும் ஆசிரியர், அவரது கடமைகள் ஒருவனது ஊக்கல் நேரம் தவறாமை முதலிய விடயங்களை மனோன்மணியத்தினூடாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. எனவே எமது முன்னைய இலக்கியங்களை "மறுவாசிப்புச்" செய்வதன் மூலம் அவை வெளிப்படுத்தும் கருத்துக்களை சிந்திப்புக்களை எமது சமூகம் பெற வழிகாட்ட வேண்டியது கல்விச் சமூகத்திக் முக்கிய பொறுப்பாகும்.

## கொண்டைக்காரி

கருநிற கூந்தல் அள்ளி
கோபுரம் செய்தவளே
உன் கூந்தலில் நிகாவுவிருக்க
பூக்களாய் பிறப்பிபடுப்பேன்

உன் ஒரப்பார்வை காண
யாகங்களாய் தவம் இருப்பேன்
உன் இதழ்கள் உதிர்க்கும்
புன்னகை சேர்த்து
என் காதல் கடவுளுக்கு
காணிக்கை இருவேன்

நாணத்தை ஆடையாய்
அணிந்தவளே
பூமிகூட உன் பாதத்தின்
முத்தத்துக்காய் காத்துக்கிடக்கிறது

கிளிமை மொழி பேசும்
கண்ணின் மணியே
சத்தமாக பேராதே
உன் குரல் கேட்டு
குயில்களும் பொறாமை
கொள்கிறதாம்..

ஓடும் நதிகள் எல்லாம்
உன் இடம்
நாடி வருகின்றன
உலகின் பூக்கள் எல்லாம்
உனக்காகத்தான் பூக்கின்றன.

சேலையை மெய்மையாய் அணிபவளே
உன் நேர்த்தி
வானவில்லை வளையச்செய்கிறது
நீல வானை சிவக்கச்செய்கிறது

படைத்தவன் பிரமன்
ஏதேனும் கலவைகளை கூட்டி
மற்ற பிளைகளுக்கு
வஞ்சனை செய்தானோ...
உன் பேரழகு
பிரமனை இங்கு
விசாரணைக்கு அழைக்கிறது...

அதிசயங்கள் அதிசயிக்கும்
அதிசயமே.....
பேரிரவிலே.....
கண்மணியே.....
ஓவியமே.....
என் காதலியே..... –காமியா

# நூல் அறிமுகம்

**நூல் : அல்வாய்ச் சண்டியன்,**
**ஆசிரியர் க. பரணீதரன்**
**சிறுகதைத் தொகுப்பு**

ஜீவநதியின் தொண்ணூறாவது வெளியீடாக ஆவணி 2017 ஜீவநதி சிறுகதைத் தொகுப்பு வெளியிடப் பட்டுள்ளது.

பன்முக ஆளுமை கொண்ட சமூக நேயமிக்க இனப்பற்றுடைய படைப்பாளி திரு. கலாமணி பரணீதரன் அவர்களின் மொழி ஆளுமை வீச்சின் வெளியீடாக ஈழத்து இலக்கிய உலகிற்கு இச்சிறுகதைத் தொகுதி கிடைத்துள்ளது. "அல்வாய்ச் சண்டியன்" என்ற மண்வாசனை கமழும் தலைப்போடு மொத்தம் 10 சிறுகதைகளைக் கொண்டு இந்நூல் வெளி வந்துள்ளது. சிறுகதைகளிற்கு இருக்க வேண்டிய முக்கியமான இயல்புகளில் ஒன்று அதன் தலைப்பாகும். அந்த வகையில் இத்தொகுதியில் இடம்பெறும் சிறுகதைகள் ஒவ்வொன்றும் தலைப்புகளில் தனித்துவம் வாய்ந்தவை. படமுடியாது இனித்துயரம், வெட்டியான், மீளப்பிறந்தவர்கள், நினைந்தது மற்று நினையாமையுமற்று, எழுதிச் செல்லும் விதியின் கை, ஏக்கம், வேர் கொண்ட உறவுகள், மானுடம் வெல்லும், இடமாற்றம், அல்வாய்ச் சண்டியன் என்பன இச்சிறுகதை களாகும்.

சிறுகதைகள் வடிவத்திலும் இயல்புகளிலும் இப்படித்தான் என வரையறை செய்ய முடியாதவை. இருந்தபோதும் சிறுகதை யாவுமே தமக்குள் ஒரு பொதுப்பண்பைக் கொண்டிருக்கின்றன. பரணீதரனின் சிறுகதைகள் யாவும் சிறுகதைக்கான பொதுப்பண்பினைக் கொண்டு காணப்படுகின்றன.

இச்சிறுகதைகள் மொழிநடையால் மேதாவிலாசம் அளிக்கின்றன. அற்புதமான மொழிநடை மண்வாசனை வீசும் தொடர்கள் பீடிகைப்படுத்தி வாசிப்போரின் அவாவைத் தூண்டி உள்ளீர்த்தல், மனவெழுச்சியுடன் கூடிய உணர்வுகளை வெளிப்படுத்தும் மொழிநடை, தொடர்களின் பிரயோகம் என்பன அற்புதம். இந்தச் சிறுகதைகளில் இரண்டு சிறுகதைகள் தவிர ஏனைய சிறுகதைகள் யாவற்றிலும் ஆசிரியர் அகநிலைப்பட்டு தானே பாத்திரமாக வெளிப்படுகின்றார்.

அல்வாய்ச்சண்டியன் சிறுகதைகள் யாவும் சமகால கதைக்களத்தை விபரிக்கின்றன. நினைந்தது மற்று நினையாமையுமற்று என்ற சிறுகதை தவிர ஏனைய சிறுகதைகள் யாவும் போராட்டச் சூழலின் அதிர்வுகளின் வெளிப்பாடு. இவற்றுள் போராட்டத்தின் வலியைக் காணலாம். போராட்டத்தின் இழப்பைக் காணலாம். சந்தித்த பேரிடிகளைக் காணலாம். இன்னும் சமகாலத்தில் போருக்குப் பின்னான அவலச் சூழலையும், சமகாலத்தில் காணும் வாழ்க்கை முறை ஏற்படுத்தி இருக்கும் வாழ்க்கைச் சிக்கல்களையும் தான் படைத்திருக்கும் கதைக்கரு வாயிலாகவும், பாத்திரங்கள் வாயிலாகவும் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

படைப்பாளிக்கு பரந்த அறிவும், பரந்த சிந்தனையும், சமூகத்தை உற்று நோக்கும் திறனும் வேண்டும். இதன்படி சமகால தமிழ்ச்சமூக அவலத்தையும், அவர்கள் படும் வேதனையையும் போரினால் ஏற்பட்ட இன்னொரு பக்க சிதிலமான எமது சமூகத்தையும் நாளாந்தம் நடமாடும் பாத்திரங்களுடாக எடுத்துக்காட்டியிருப்பது சிறப்பிற்குரியது.

பரணீதரனின் படைப்பிலே பக்குவமுண்டு, பொறுப்புண்டு, புரட்சிகரமுண்டு அதேநேரம் பண்பாடுண்டு, கதைகளிற்கு ஏற்ப ஏற்றவகையில் மொழியினை கையாளும் ஆற்றல் இவருக்கு தனித்துவமானதும். மண்வாசனை சார்ந்த மொழி, அறிவியல் சார்ந்த மொழி, கவிதா நடைமொழி, கிளைமொழிச் சொல் பயன்பாடு இவர் மொழியில் மிக எளிமையாக வந்து கலக்கின்றன.

ஏங்கித் தவிக்கும் தாயின் துயரம் படமுடியாது இனித்துயரம் எனவும், சூழ்நிலைக் கைதியாக வெட்டியானும், பயந்து வாழும் இழப்புடன் கூடிய ஆளுமைமிக்க போராளியாக மீளப் பிறந்தவர்களும், சாதிய உணர்வு இன்னும் இருப்பதை வெளிப்படுத்தும் மானுடம் வெல்லும் சிறுகதைகளுமென இவரது படைப்புக்கள் எம்முன்னே காட்சிப்படிமத்தை தோற்றுவித்து சிந்தைக்குள் ஏதோ ஒன்றை உரைக்கச் செய்கின்றன.

இவரது கதைகள் ஒரே கதைக்குள் இரண்டு செய்திகளைத் தெளிவாக எமக்குச் சொல்லும் வகையில் அமைந்திருப்பது சிறப்பார்ந்த அம்சமாகும். வேர்கொண்ட உறவுகள் சிறுகதை நட்பின் மகிமையைச் சொல்லும் அதே நேரம் போரின் வறுமையைச் சொல்லுகின்றது. இவ்வாறே ஏனைய கதைகளும் அமைந்து காணப்படுகின்றன.

அல்வாய்ச்சண்டியன் ஈழத்து இலக்கிய உலகிற்கு ஒரு சிறந்த வரவு. எம்மவர் எல்லோரும் வாசிக்க வேண்டியதும் அதேநேரம் யோசிக்க வேண்டியதுமான படைப்பு "அல்வாய்ச்சண்டியன்" தந்த பரணீதரனின் படைப்புக்கள் இன்னும் பல ஈழத்து இலக்கியகளத்திற்குள் வந்து சேரட்டும்.

நத்தார் சிறுகதை

# அவளும் ஏழைதானே

ம.சூசைநாயகம்

எனது நெஞ்சம் குமுறுகின்றது. சென்ற வருடம் எனது தந்தை உயிருடன் இருந்தார். ஆகையால் குடும்பப் பொறுப்பு என்ன என்பதே தெரியாமல் வாழ்ந்தேன். ஆனால் இன்று. அதை நினைக்கும் போது சென்ற வருடம் நத்தார் திருநாளுக்கு முதல்நாளே எனது தந்தை எனக்கும், என் தங்கைக்கும், தாயாருக்கும் தனக்கும் வேண்டிய உடுபுடவைகள், உண்பதற்கு வேண்டிய பண்டங்கள் யாவற்றையும் வாங்கி வந்தார். ஆனால் இம்முறை?... என் தங்கை அமலநாயகி கேட்ட கேள்வி என்னையும் என் தாயையும் உலுக்கிவிட்டது. உள்ளத்தில் அடங்கிக் கிடந்த துன்பப் புயலை எழுப்பிவிட்டது. பாவம் பச்சிளம் சிறுமி! எட்டு வயதுக் குழந்தை, குடும்ப நிலைபற்றி உணர்ந்து கொள்ளும் சக்தி ஏது அவளுக்கு?

அவளுடைய உடன் தோழி புஸ்பா அடுத்த வீட்டில்தான் வசிக்கிறாள். அவளின் தந்தை நேற்றுத் தான் கொழும்பிலிருந்து வந்திருந்தார். அவர்கள் குடும்பத்தார் அனைவருக்கும் அழகிய ஆடைகள், வாணவெடிகள், பலூன்கள் வாங்கி வந்திருந்தார். நேற்று என் தங்கை வழக்கம் போல் அவளுடைய வீட்டிற்கு விளையாடப் போயிருந்தாள். புஸ்பா தனது புதிய ஆடைகளைக் காட்டி பெருமைப்பட்டிருக்கிறாள். என் தங்கையின் மனம் வேதனைக் குளமாகியது.

நாங்கள் எவ்வளவு தான் கஸ்டப்பட்டாலும் அந்தப் பிஞ்சு உதரத்தை மட்டும் பட்டினி போட்டது கிடையாது. உள்ளதை அவளுக்கு அம்மா அன்புடன் ஊட்டினாள். ஆனால் இன்று, அவளோ அதிகம் சாப்பிடவில்லை. அவளின் சிரித்த முகத்தில் துன்பக்கதிர்கள் சிதறிக்கிடந்தன. அவளின் முகவாட்டம் என் அன்னைக்கு ஏக்கத்தைத் தந்தது. முகவாட்டத்தின் காரணத்தை தானாகவே வெளியிட்டாள் தங்கை.

"அம்மா! அடுத்த வீட்டுப் புஸ்பா புதுப்புதுத் துணிகள் வாங்கியிருக்கிறா. மத்தாப்பூக்களும் வாங்கிக் கொடுத்திருக்கிறார் அவளுடைய அப்பா. ஆனால்,

தொடர்ச்சி.... 55 பக்கம்

# பெண்ணாக நீயிருந்து பேருவகையூட்டுகிறாய்

## கவிதை மழை

கண்ணாலே உந்தன்
கண்ணழகு கண்டு
காதலிக்கத் தோன்றவில்லை
கலை நயமே தோன்றுதடி

தாயை நினைவுறுத்தும்
தயையான கண்கள்
கடவுளைக் காட்டும்
கருணை மொழி பார்வை

நீண்ட நெடிய
நின் விழி நோக்கி
உள்ளத்தை ஊடுருவி
அன்பைப் பெருக்குதடி

சோதரியாய் நீயிருந்தால்
சொந்தத்திற்கேது குறை
உறவென்று நீயிருந்தால்
ஊக்கத்துக்கேது குறை

நண்பியென்ற முகமோ
பாசத்தையூட்டுதடி
புன்னகை இதழ்கள்
பூரிப்பையூட்டுதடி

சேலைக் கருவிழிகள்
உருண்டு பிறழ்கையியே
மும்மையுலகும்
ஒளிபெற்றுத் திகழுதடி

மி. சூசைதாசன்

## என்ன செய்வேன் நான்?

வலைதனையே கையிலே எடுத்து
விடிந்திடுமோ? இல்லை நாளை
இடிந்திடுமே வாழ்க்கை என்று
பாய்ந்து பாய்ந்து செல்கிறானே பைந்தழிழன்

அடுப்பம் கரையையும் பூனை
நாடவில்லை என்றதாலோ என்னவோ
அயலவரும் கலந்திட மறுக்கிறார்கள்
அம்பையும் எய்திட துடிக்கிறார்கள்
அருமை மகனையும் ஒதுக்குகிறார்கள்

பள்ளி செல்லடா கண்ணா என்றேன்
பசிக்குது அம்மா என்றான்
பாதிப் பயறினை கால்வயிறூட்டி
பாசத்துடன் பள்ளிக்கு அழைத்துச் சென்றேன்

வாத்தியாரோ வாடா உள்ளே என்றார்
வாரி அணைப்பார் என்றெண்ணினேன்
கடந்த வருடக் கட்டணங்களையும் சேர்த்து
தந்த பின்னே வகுப்பறை என்றார்

கால் வயிறு பயற்றுக்கே
கால் தேய நடந்தவள் நான்
கடந்த ஆண்டின் கட்டணமுமா?
கடவுளே நான் என் செய்வேன்

பள்ளி விட்டு வந்த மகன்
படிக்க விருப்பமில்லை என்றுரைத்தான்
கடலுக்குத் தான் செல்வேன் என்றான்
கடனையும் அழிப்பேன் என்றான்

ம்... நான் என்ன செய்வேன்
மௌனமே என் பாஷை ஆகியதே

ஐசா



# தாய்

## மறுபடியும் வருமா?

என்னவோ நடக்கிறது – என்
எண்ணங்களோ
மீட்டிப்பார்க்கிறது
மானம் காத்த தமிழனெங்கே!
மானிடரை வாழவைத்த
தமிழனெங்கே!

மறுபடியும் வந்திருமோ!
மன்னா உன் ஆட்சி
மனமெல்லாம் சிலிர்க்கிறது
மரணித்த எம் உயிர்களை
எண்ணி

பொற்தேரில் உன் வரவு
இல்லாதுவிடினும்
பொறுமையோடு
காத்திருக்கிறோம் – நாம்
பொழுதெல்லாம் விடிகிறதே
எம் ஈழம்
பொலிவுடன் திரும்புமென்ற
நம்பிக்கையில்

**ஜெ.துஷானா**

ஈர் ஐந்து மாதங்கள்
ஈன்றெடுத்த தாயினை
இருகரம் கூப்பி
இசைந்து நிற்கின்றேன்
இவள் என் அன்னை என்று
பூமித்தாய் தாங்குமுன்னே
என் சுமையை தாங்கி நின்றாள்
புன்னகை சிரிப்போடு

அன்பென்ற ஒரு வடிவம்
அன்னையின் மடியினிலே
பண்பென்ற மறு வடிவம்
மாதாவின் மனதினிலே

கட்டிப்பிடித்து முத்தமிட்டு
கைவிரல் பிடித்து கைநிகம் கடித்து
உதிரத்தை உரமாக்கி
உறவினை பலமாக்கி
உண்மைக் கதை சொல்லிக் கொண்டு
ஊட்டிடுவாள் உணவினையும்

வெண்மேகம் கருமுகிலாகி
களங்கமில்லாத் துளியினை
பன்னீராய் தெளிக்கின்றது
பாசம் வைத்த தாயின் மேல்.

**ஜதுஷன்**

# ஆசிரியரின் ஓர் நாள்

திருமதி.பாஸ்கரா பிரமேந்திரராஜா

நான்கு மணிக்கு அலாரம் அலற
இரண்டு வயது மகனும் சேர்ந்து அலற
அரக்கப் பரக்க அலமத்து எழும்பி
அரவணைத்து மகனையும் ஆறுதல்படுத்தி
அவசர அவசரமாக வெளியில் வந்து

காலைக் கடன்களை கடமையென முடித்து
வேலைகளைத் தொடங்கி இறைவனைத் தியானித்து
வீட்டினைப் பெருக்கி குப்பைகளை அகற்றி
அடுக்களை சென்று தேநீர் தயாரித்து
அனைவருக்கும் ஆங்காங்கே அதனை வைத்து

காலை உணவைத் தரமாகத் தயாரித்து
பகல் உணவைத் தரமாகத் தயாரித்து
அத்தனையும் பதமாகப் பக்குவப்படுத்தி
அடுக்களையை விட்டு வெளியில் வந்து
அடுத்து என்ன வேலையெனத் தலைநிமிர

சின்ன மகனும் சிணுங்கி வர
என்ன எனக்கேட்டு அணைத்து அவனை
சுத்தம் செய்து பாலையும் புகட்டி
மூத்தமகனும் என் புத்தகம் எனக்
கத்த அதனையும் தேடிக் கொடுத்து

அத்தனையும் செய்து களைத்து
விறுவிறுத்துப் போகையிலே
சத்தமாக மாமனாரின் குரலும் காதில் விழ
இதோ வருகின்றேனென அவரின் அறைக்குள் ஓடி
பார்த்து என்ன எனக்கேட்டு பணிவிடையும் செய்து
பார்த்த போது மணி ஏழாகின்றது.
நிலைகுலைந்து ஓடி குளியலறைக்குள் சென்று
நீராடி தலைதுவட்டி தன்னை அலங்கரித்து
களைப்பில் உறங்கும் கணவனை எழுப்பி
நேரமாகிறது வேலைக்குப் போக எனக்கூறி
அவசரமாக அவரின் பணிகளையும் செய்து

சின்ன மகனை ஆயாவிடம் விட்டு
பெரிய மகனை இழுத்துக் கொண்டு
மோட்டார் சைக்கிளை தள்ளி உருட்டி
ஸ்ராட் செய்து இருவருமாகப் படித்து
பாடசாலை அண்மிக்க மணியும் அடித்தது.

சிவப்புக்கோடு அடிப்பதற்கு முந்திக் கொண்டு
தவிப்புடன் ஓடிச் சென்று கையொப்பமிட்டு
காலை எட்டி நடைநடந்து
காலைப்பிரார்த்தனை இடம் சென்று
மாணவர்களை ஒழுங்குபடுத்தவே மூச்சு வாங்கியது

துடுக்குத் தனமுள்ள மாணவர்களை அடக்கி
அடுக்காய் பாடங்களை அன்போடு புகட்டி
விடய ஞானங்களை விபரமாகக் கூறி
தடம்பதிக்க மாணவர்களை வழிப்படுத்தி
கடுமையான உழைத்துப் போராடி

மெல்லக் கற்போரைத் துரிதப்படுத்தும் வேலைத்திட்டமென்றும்
மீத்திறன் மாணவர்களுக்கான வேலைத்திட்டமென்றும்
அலகுப்பரீட்டை என்றும் கணிப்பீட்டுப் பரீட்சையென்றும்
மாதாந்தம் பரீட்சையென்றும் செயற்றிட்ட மென்றும்
நாளாந்தம் இவற்றையெல்லாம் சலிக்காது நடாத்தி
வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகளின் பார்வைக்காக
துலக்கமாக புள்ளிப் பகுப்பாய்வுகளையும் உருப்படிப் பகுப்பாய்வுகளையும்
வகைகூறவும் வளம்படுத்தவும் எழுதிச் செயற்பட்டு
வரிசை வரிசையாக அவர்கள் கூறும் குறைநிறைகளையும் ஏற்று
வருடங்கள் பல உருண்டோடிச் சென்றன.

நித்தம் நித்தம் மாணவர்களுடன் போராடி
சத்தம் அதிகமாகப் போட்டுக் கற்பித்துச் செயற்பட்டதால்
இரத்த அழுத்தங்களும் மன அழுத்தங்களும்
இரக்கமின்றி அவரைத் தேடி வந்ததுவே
இந்நிலையிலும் அவர் பணி உற்சாகமாக
இனிதே தொடர்ந்து அர்ப்பணிப்புடன் நடைபெறுகின்றதே

# கற்பித்தல் முறைகள்

கு. பரமானந்தம்

கற்போனிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் கற்போனின் இயலுமைக்கேற்ப கற்பிப்போரினால் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளும் நுட்பங்களும் கற்பித்தல் முறையினுள் அடக்கப்படும். கலைத்திட்ட அபிவிருத்தியில் கற்பித்தல் முறைகள் மிகப்பெரிய பங்களிப்புச் செய்கின்றது. கற்பித்தல் என்பது ஒரு குழுச் செயற்பாடாகும். கற்பிப்போன், கற்போன், பாடவிடயம் இம் மூன்று பிரதான மாறிகளுக்கிடையிலான இடைவினை பிரதான பங்களிப்பைச் செய்கின்றது. இங்கு கற்பிப்போன் சுயாதீன மாறியாகும். அதாவது திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல் ஆகியன கற்பிப்போனால் சுதந்திரமாக கற்றல் அனுபவங்களை கற்போன் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும். அவ்வாறே கற்பிப்போனால் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கற்பவனின் செயற்பாடுகளை வழிப்படுத்துகின்றது. இதனால் மாணவன் சார்பு மாறியாகக் காணப்படுகின்றான். அதே போல் பாடவிடயம், நுட்பங்கள், கற்பித்தல் உத்திகள், ஊக்குவிப்புக்கள், நுட்பங்கள் போன்றன தலையீட்டு (Intervening) மாறியாகும்.

Biggs (1999) என்பவரது ஆய்வின்படி வெவ்வேறு வகையான கற்றல் உதவிகளையும், உத்திகளையும், கற்றல் செயற்பாடுகளையும், சுயகற்றல் செயற்பாடுகளையும் மாணவர் தாமாக செயற்படுத்தக்கூடிய வகையில் வழங்குவதற்கு திட்டமிடுவதன் மூலம் வினைத்திறனுள்ள கற்றல் விளைவுகளை எதிர்பார்க்கலாம். கற்றல் பற்றி (Herrington & Oliver, 2002) குறிப்பிடுகையில் கற்றல் சூழலானது கற்பவருக்கு பிரச்சினை தீர்க்கும் வழிமுறைகளையும், உண்மைக்கு கிட்டிய அனுபவங்களை அல்லது உண்மை அனுபவங்களை பெறக்கூடியதாக அமைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடுகின்றார். உதாரணமாக கற்றல் வளங்களுடன் கூடிய கற்றல் சூழலானது விசாரணைரீதியான கற்றல், செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல், படிமுறையான இடைவினையாற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளுக்கு பொருத்தமானதாக அமைக்கப்படல் வேண்டும்.

கற்பித்தல் முறையானது மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான ஒரு கட்டுருவாக்கச் செயன்முறையாக அமைகின்றது. அதாவது மாணவர் செயலுறு நிலையில் ஈடுபாட்டுடன் தனது அறிகையை தன் முன்னறிவுடன் தொடர்புபடுத்தி புதிய அறிவைப் பெற்றுக்கொள்ளுகின்றான். ஒவ்வொரு மாணவரினதும் செயற்பாடுகளை அவதானித்து அவர்களிடம், வினாக்களை வினாவுவதன் மூலமும், அவர்களின் செயற்பாடுகளை நேர்மனப்பாங்குடன் நோக்கி பின் னூட்டல் வழங்குவதன் மூலம் மாணவர்களின் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்ப டுகின்றது.

கற்றல் வளங்கள் நிறைந்த சூழல் (Learning Resources Rich Enviorement -LRRE) காணப்படுவதால் மாணவர்கள் மகிழ்வுடன் இடைவினைச் செயற்பா டுகளில் பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இலத்திரனியல் ஊடகங் களின் வளர்ச்சிப்போக்கில் பல்லூடகம் (Multi media) ஆட்களுக்கிடையிலான தொடர்பாடல் திறன்களையும் உத்திக ளையும் மாற்றமுறச்செய்துள்ளது. இதன்காரணமாக கல்வி முறைமை யிலும் கற்பவருக்கு தகவல்களை பரிமாற்றும் முறையிலும் தாக்கத் தினை ஏற்படுத்தியுள்ளது. பல்லூடகப் பாவனை வகுப்பறைச் செயற்பா டுகளில் நெகிழ்சிப் போக்கினையும் பல்பரிமாண பாவனைப் போக்கி னையும் கொண்டுள்ளது. குறிப்பாக எழுத்துரு, படவுரு, ஒலி, அசையும்



படங்கள், காணொளி என பல்லூடக வடிவில் தகவல்களை வழங்கவும், தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும், இடைவினையை மேம்படுத்தவும் ஏதுவாக அமைவதுடன் பாரம்பரிய கற்பித்தல் முறையான "chalk-and-talk" முறைமையில் இருந்து பல்லூடக போதானாத்துவ (Multimedia-based instructional strategies.) உத்திகளை முன்னெழச் செய்துள்ளதையும் காணலாம்..

கட்டுருவாக்க கற்பித்தல் அணுகுமுறையில் பல்வேறு அனுகூலங்கள் காணப்பட்டாலும், தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப கற்றல் வளங்களை தயார்படுத்தலுக்கு தேவைப்படும் நேரம், அதிக எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்ட வகுப்பறைகள் போன்றவற்றில் பயன்படுத்து



வதற்கான நுட்பமுறைகள், ஆசிரியர் பயிற்சிப்படுத்தல் தொடர்பில் வாணர் மைத்துவ விருத்தி தொடர்பான விழிப்பணர்வும் செயல்திறனும் ஆசிரியர் மத்தியில் தேவையாகின்றது. குறிப்பாக அசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் புத்தாக்கம்சார் கற்பித்தல் முறைகளுக்கான விதந்துரைப்புக்களை உள்வாங்கி நடைமுறைப்படுத்துவதும் அதனை கற்றல் சூழமைவிற்கேற்ப மாற்றியமைத்து பயிற்சிப்படுத்தலும் அவசியமாகின்றது. இச் செயன்முறை பின்வரும் செயற்பாட்டு அம்சங்களைக் கொண்டிருக்கும்.

1.1. மாணவரின் கற்றல் இலக்கு தொடர்பில் ஊக்கத்தையும் இணைப்பையும் ஏற்படுத்துதல். முன்னறிவைத் தூண்டுதல், துணைக்குறிப்புக்களைக் கொடுத்தல், வினாக்களை வழங்குதல், சிந்திப்பதற்குரிய வினாக்களை வழங்குதல். பிரச்சினை தீர்த்தல் படிமுறையாக்கல் செயற்பாடுகளை வழங்குதல் - ஒரு இலக்கினை அல்லது பணியை பூரணப்படுத்தும் போது சொல்சார் சிந்தனை செயன்முறைகளைப் பயன்படுத்ததல்

1.2. கற்றல் இலக்குகளை கையாளக்கூடியதாக, அடையக்கூடியதாக இலகுபடுத்தி படிமுறையாக்கல் - அதாவது ஒரு பணியை சிறுசிறு பணிகளாகப் பிரித்து வேலைப்பகிர்விற்கு ஏற்ப வழங்குதல்

1.3. கற்றல் இலக்குகளை சுயமாக அடையக்கூடிய வகையில் சில திசைமுகப் படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்- கூட்டுக்கற்றல், ஒத்துழைத் துக்கற்றல், சகபாடிகளுக்கிடையே வேலைப்பகிர்வு மற்றும் கருத்தாடலை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை திட்டமிடல்.

1.4. குறித்த விடயத்தில் மாணவரின் உண்மை நிலையையும் (Zone of Actual Proxcimal ZAP) - அடையப்படவேண்டிய நிலைக்குமிடையிலான (Zone of Proxcimal Development) ZPD) இடைவெளியை (gaps) சரியாக புரிந்துகொண்டு கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

1.5. மாணவரின் கற்றல் பேறுகள், எதிர்பார்ப்புகள் தொடர்பாக ஆற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை தெளிவாக வரையறை செய்தல், உறுதியான ஊக்கிகளை வழங்குதல்.

எனவே ஆசிரியர் ஒருவர் கற்பித்தல் விருத்தியில் எத்தனை முக்கியத்துவம் பெறுகிறார் என்பது தெளிவாகிறது. ஆசிரியர் ஒருவரே சுயாதீன மாறியாக இருக்கின்றார். எனவே ஆசிரியன் ஒருவன் கலைத்திட்டவிருத்தியில் சகல செயற்பாடுகளிலும், அதாவது கற்பித்தல் முறையை தீர்மானித்தல், மதிப்பீடு செய்தல், பின்னூட்டல் பெறுதல் மீளவும் திட்டமிடல் என்று எல்லா விடயங்களிலும் சுய முடிவு மேற்கொள்ளக்கூடியவராகவுள்ளனர். மேலதிக தேடலுக்கு:

Udaiveer, 2004 - Modern Teaching and Curriculum Management, Anmol publications India.

Louis Cotien 2002 - A guide to Teaching Practice, Lawrence Manion Rout ledge, London and New and Keith Morrison Newyork.

Bob Monn & Ann Mages E.d - Teaching and Learning in the 2004 Sheltor Sevenday Scholl. Rout Ledge London & Newyork.

17ஆம் பக்கத் தொடர்..

இதனோடு கூட நாடகங்களுக்குத் தேவையான அரச முடிகள், கதாயுதம், கவசங்கள், வாள், அம்பு வில் போன்றவற்றை அமைத்துக் கொடுப்பதிலும் மகிழ்ச்சிய டைகின்றார்.



தனக்குள் ஏற்பட்டுள்ள உந்துதல் ஒன்றினால் மட்டுமே கலைவடிக்கும் இக்கலைஞனுக்கு துணையாக இருப்பது உளியும் சுத்தியலும் மட்டுமே. யார் கண்ணிலும் படாமல் வளர வாய்ப்பு இல்லாமல் கிராமங்களுக்குள் ஒடுங்கிப் போயிருக்கும் இவ்வாறான கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டியது கலையுலகினதும் கலை இரசிகர்களினதும் பொறுப்பாகின்றது.



# தீர்ப்பு

ம. நிரேஷ்குமார்

அண்மைக் காலங்களில் எமதர்ம ராஜாவினால் வழங்கப்பட்டு வருகின்ற புதுமையான தண்டனைகள் பற்றிய செய்திகள் ஏழேழு உலகங்களுக்கும் பரவியிருந்தன!

அப்புதுமையான தண்டனைகள் பற்றி மக்கள் பரவலாகப் பேசவும் தொடங்கியிருந்தனர்.

வாகனங்களை லீசிங்கிற்கு வழங்கி மக்களை ஏமாற்றிய லீசிங் கொம்பனி முதலாளியை எருமைக் கடா வண்டிச் சக்கரத்துடன் சேர்த்துப் பிணைக்கும் தண்டனை..

வாள்வெட்டுக் கும்பலுடன் சேர்ந்து மக்களை வெட்டியவனை விறகை வைத்துப் பிளப்பதற்கான மரக் குற்றியாக பயன்படுத்தும் தண்டனை.. போன்ற புதுமையான தண்டனைகள் குற்றம் இழைப்பவர்களைப் பயப்படச் செய்யத் தொடங்கியிருந்தன.

குற்றங்கள் ஓரளவு குறைந்திருப்பதுவும் உண்மைதான்!

ஆனால்.

சுந்தர தேசத்தில் இன்னும் குற்றங்கள் குறைந்ததாகத் தெரியவில்லை. நாளுக்கு நாள் குற்றங்களின் எண்ணிக்கைகள் அதிகரித்துச் செல்லும் செய்திகள்தான் கிடைக்கின்றன. குற்றவாளிகளின் எண்ணிக்கையும் வழக்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. வழக்குகள் பலவும் நிலுவையில் கிடக்கின்றன.

விசாரணைக் குழுக்கள் அமைத்து விசாரணைகளை மேற்கொள்வதிலும் எமதர்ம ராஜாவிற்கு உடன்பாடு இல்லை. வீண் செலவிற்கும் கால தாமதத்திற்கும் அது வழி வகுக்கும் என்பது எமதர்ம ராஜாவின் எண்ணம்!

விசாரணைக் குழுவின் அங்கத்தவர்கள் விலை போய் விடக் கூடும் என்ற பயமும் எமதர்ம ராஜாவிற்கு உண்டு. அதனால்தான் அண்மைக் காலங்களில் விசாரணைகளைத் தனியாகத் தானே செய்து வருகின்றார்!

இன்றைய விசாரணைகள் ஆரம்பமாவதற்கு இன்னும் சில நாளிகைகளே இருக்கின்றன. சபையினர் ராஜாவின் வருகைக்காக காத்திருக்கின்றனர். எமதர்ம ராஜா சபைக்குள் நுழைகின்றார்.

"எமதர்ம ராஜா சபைக்கு வருகின்றார்"
வாயிற் காவலன் எமதர்மனின் வரவை சபைக்கு எளிமையான முறையில் அறிவிக்கின்றான். சபையினர் அனைவரும் எழுந்து நின்று தமது மரியாதையை செலுத்துகின்றனர். எமதர்ம ராஜா தனது சிம்மாசனத்தில் அமர்ந்ததும் தனது தலையசைப்பினால் சபையினரை அமருமாறு பணிக்கின்றார்.
"சித்ரகுப்தா இன்று என்ன செய்தி?"
"பிரபு தாங்கள் வழங்கும் புதுமையான தண்டனைகளால் பூவுலகில் இப்போது குற்றங்கள் குறையத் தொடங்கியுள்ளன"
"அப்படியா? மிக்க மகிழ்ச்சி"
"அது எமக்கும் மகிழ்ச்சியே. ஆனால்"
"என்ன குப்தா? ஆனால். என்று நீளமாக இழுக்கிறாய்!"
"அது வந்து பிரபு. தண்டனைகள் மூலம் மக்களைத் திருத்த முடியாது. அற்றிரியூட் சேஞ்சை ஏற்படுத்தினால் தான் மக்களைத் திருத்த முடியும் என்ற பேச்சும் பூவுலகில் பலமாக அடிபடுகிறது"
"சித்ர குப்தா! நீ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற விழாவுக்கு விருந்தினராக சென்று வந்ததிலிருந்து உன் போக்கே சரியில்லை. அற்றிரியூட் என்கிறாய் சேஞ் என்கிறாய் எனக்கு ஒன்றுமே புரியவில்லை!"
"மன்னிக்க வேண்டும் பிரபு! மக்களைத் தண்டனைகளால் திருத்த முடியாதாம். அவர்களின் தவறுகளை அவர்களாகவே உணரும் படி செய்ய வேண்டுமாம்"
"அப்படியா? இந்த மக்களே இப்படித்தான்! தண்டனை வழங்குவதை நிறுத்தினால் தண்டனை இல்லாததால்தான் பிரச்சினை என்பார்கள். தண்டனை வழங்கினால் தண்டனை வழங்குவது தவறு என்பார்கள்.

அவர்களின் இயல்பே அப்படித்தான்! அவர்களின் பேச்சை நிறுத்து சித்ர குப்தா! இன்றைய வழக்குகள் பற்றிச் சொல் பார்க்கலாம்"

"இன்றும் பல வழக்குகள் விசாரணைக்கு வரவுள்ளன பிரபு! பாடசாலை மாணவியைக் கற்பழித்துக் கொலை செய்தவனின் விசாரணையை விரைவுபடுத்துமாறு பூவுலகில் மக்கள் கலகம் செய்கிறார்களாம்"

"என்ன? மக்கள் கலகமா?"

"ஆமாம் பிரபு. தாங்கள் உத்தரவிட்டால் நான் இப்போதே பூவுலகம் சென்று கலகம் செய்பவர்களை துவம்சம் செய்து விட்டு வருகின்றேன்"

"நிறுத்து சித்ரகுப்தா! நீயும் கொடுங்கோல் ஆட்சியர்களைப் போலப் பேசத்



தொடங்கி விட்டாய். அங்கு நடப்பது நல்லாட்சி அரசாங்கம். மக்கள் அமைதியான முறையில் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு எந்த விதத் தடையும் இல்லை"

"மன்னிக்க வேண்டும் பிரபு! உணர்ச்சி வசப்பட்டு அவ்விதம் உரைத்து விட்டேன்"

"அதை விடு சித்திரகுப்தா! நீ ஏதோ கூறினாயே பாடசாலை மாணவியைக் கற்பழித்து கொலை செய்தவன் என்று.. அதனைச் சற்று விளக்கமாகச் சொல்"

"அது வந்து பிரபு. அவனும் அவனது கூட்டாளிகள் நால்வருமாகச் சேர்ந்து."

சித்ரகுப்தன் சொல்லச் சொல்ல எமதர்மனின் கண்கள் கோபத்தால் கனன்றன. அந்த வெப்பம் தாங்க முடியாமல் சபையில் இருந்தவர்கள் தமது கண்களை கைகளால் மறைத்தபடி எமதர்ம ராஜாவின் அடுத்த கட்டளைக்காகக் காத்திருக்கின்றனர்.

"சித்ர குப்தா! அழைத்து வா அவனை இங்கே!"

எமதர்ம ராஜாவின் சிம்மக் குரலால் எமலோகமே அதிர்கிறது.

ஒரு இருபத்து நான்கு வயது மதிக்கக் கூடிய இளைஞன். கைகள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தன. காவலர்கள் அவனைத் தர தரவென்று இழுத்து வந்தனர்.

தற்போது வெளி வருகின்ற தமிழ்ச் சினிமாப் படங்களின் கதாநாயகர்களின் தோற்றத்தைப் போல அசல் பொறுக்கியாகத் தெரிகிறான்.

எமதர்ம ராஜா தனது கோபக் கனல் வீசும் கண்களால் அவனை நோக்குகிறார்.

"மானிடனே என்ன காரியம் செய்தாய்? சிட்டுக் குருவியாகச் சிறகடித்துப் பறக்கும் பள்ளிச் சிறுமியை. சீ நீயும் ஒரு மனிதனா! உன்னை ஈன்றெடுத்த உன் தாயும் ஒரு பெண்தானே!"

இப்போது சித்ரகுப்தன் இடைமறித்துப் பேசுகிறான்.

"பிரபு இவன் புரிந்த அந்த ஈனச் செயல் அறிந்த மறுகணமே அத்தாய் கொடிய விஷமருந்தித் தற்கொலை செய்து விட்டாள்"

"அவள் ஒரு தமிழ்ப் பெண்ணல்லவா! கற்பைத் தம் உயிரினும் மேலாக மதிக்கும் மரபு வழி வந்தவள். தான் பெற்ற மகன் இன்னொரு பெண்ணின் கற்பைச் சூறையாடினான் என்ற செய்தி அறிந்த பின் எப்படி அவளால் உயிர் வாழ முடியும்?"

"ஆமாம் பிரபு. மரணக் கணக்குப் புத்தகப் பதிவின் படி அவள் மரணம் அடைவதற்கு இன்னும் பல வருடங்கள் இருக்கின்றன"

"வெட்கம். வேதனை. இவனைப் போன்ற இழி மகன்களின் செயலால் எமதர்மன் தன் கடமை மீறினான் என்ற பழிச்சொல்லுக்கு நான் ஆளாக வேண்டியுள்ளது"

"ஆமாம் பிரபு. வேண்டுமானால் காணமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலில் அவளின் பெயரைச் சேர்த்து விடவா?"

"நிறுத்து சித்ர குப்தா? நீயும் மானிடர்களைப் போல பேசத் தொடங்கி விட்டாய். அந்தப் பெண்ணை சகல மரியாதைகளுடனும் சொர்க்கத்திற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்! இது எமதர்ம ராஜாவின் கட்டளை"

"செய்கிறேன் பிரபு"

"அந்தத் தாயின் காலில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெற வேண்டும்" எமதர்ம ராஜா கரகரக்கும் குரலில் தனக்குத் தானே பேசிக்கொள்கிறார்.

எமதர்ம ராஜாவின் கோபமான பார்வை இப்போது அந்த இளைஞன் மீது திரும்புகின்றது.

"அடே மானிடனே நீ புரிந்த குற்றத்திற்கு உனக்கு என்ன தண்டனை தெரியுமா?"

"என்ன பெரிய தண்டனை? 6 மாதம் சிறைத் தண்டனை. ஒரு ஜயாயிரம் ரூபாய் தண்டப் பணம் அவ்வளவு தானே!"

எமதர்ம ராஜா பலமாக வாய்விட்டுச் சிரிக்கின்றார். அந்தச் சிரிப்பிலிருந்த கர்வமும் கோபமும் இளைஞனை பயம் கொள்ளச் செய்கிறது. அவன்

மௌனமாக நிற்கிறான்.
"மானிடனே நீ கூறிய தண்டனைகள் பூவுலகில் வழங்கப்படும் தண்டனைகள். ஈ.பி.கோ முன்னூற்றியிரண்டாவது செக்ஷன். இது எமதர்ம ராஜாவின் தர்பார். இங்கு வழங்கப்படும் தண்டனைகள் எந்த செக்ஷனிலும் அடங்காது"
சித்ரகுப்தனின் வார்த்தைகள் அந்த இளைஞனின் பயத்தை இன்னமும் அதிகரிக்கின்றன.
"சொல் மானிடனே! உன் குற்றத்தை நீ ஒப்புக் கொள்கிறாயா?"
"குற்றமா? எது குற்றம்?"
இளைஞன் இப்போது தைரியமாகப் பேசுகிறான்.
"குப்தா! இவன் என்ன பேசுகின்றான்?"
சித்ரகுப்தன் இப்போது கோபமாக இளைஞனை நோக்கித் திரும்புகின்றான்.
"உனக்கு என்ன மறை கழன்று விட்டதா? நீ புரிந்த குற்றம் உனக்குத் தெரியாதா என்ன? நீதி மன்ற விசாரணையில் உன் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டு விட்டது. பிறகென்ன? எது குற்றம் என்கிறாய்?"
"ஏற்கனவே குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெற்றவனிடம் பிறகென்ன விசாரணை?"
இளைஞன் தன் சாதுர்யமான பேச்சினால் சித்ரகுப்தனை மடக்குகிறான். சித்ரகுப்தன் சற்று நிலை தடுமாற எமதர்ம ராஜா குறுக்கிடுகிறார்.
"மானிடனே! இது எமதர்மன் சபை. ஒரு உயிரின் மரணத்திற்குப் பின்னரும் பாவ புண்ணியக் கணக்கின் பிரகாரம் தண்டனை வழங்கும் அதிகாரமுடைய ஒரே ஒருவன் நானே! அது உனக்குத் தெரியாததா என்ன?"
"அதெல்லாம் எனக்குத் தெரியாது"
இளைஞன் அசண்டையீனமாகப் பதில் சொல்கிறான்.
"பிரபு விசாரிக்க வேண்டிய முறையில் விசாரித்தால் இப்படி அசண்டையீனமாகப் பதில் சொல்ல மாட்டான். என்னிடம் ஒரு ஐந்து நாளிகைகள் தனியாத அனுப்புங்கள்! உண்மையை அப்படியே கக்க வைக்கிறேன்"
"எனக்கும் அதுதான் சரியாகத் தோன்றுகிறது"
"யாரங்கே? இவனை இருட்டறைக்கு இழுத்துச் செல்லுங்கள்"
"வேண்டாம். வேண்டாம். என்னை விட்டு விடுங்கள் நீங்கள் என்ன கேட்டாலும் சொல்லி விடுகிறேன்"
"அப்படி வா வழிக்கு. இப்போது சொல் என்ன நடந்தது?"
இளைஞன் சொல்லத் தொடங்குகிறான். அவன் சொல்லச் சொல்ல எமதர்ம ராஜா சித்ரகுப்தன் சபையிலிருந்த மந்திரிகள் பிரதானிகள் பொதுமக்கள் என அனைவரும் திகைத்துச் சிலையாக நிற்கின்றனர்.

---

அது ஒரு மாலை வேளை. மழைத் தூறலில் மண் வாசனை.
சுப்பனின் கையடக்கத் தொலைபேசி "தைரியமாகச் சொல் நீ மனிதன்தானா?" என்ற பாடலின் இசையைப் பின்னணியாக்கி சிணுங்குகிறது.

சுப்பன் கைத்தொலைபேசியுடன் சற்றுத் தூரத்தில் இருந்த மரத்தடி மறைவுக்குச் செல்கிறான். "சரியண்ணை. சரியண்ணை"

இவன் எதுவுமே பேசவில்லை.

யாரோ சொல்கின்ற தகவல்களை செவிமடுத்து தலையாட்டுகிறான்.

நண்பர்கள் நால்வருக்கும் மகிழ்ச்சி!

சுப்பனின் தொழில் அவர்களுக்குத் தெரியும்.

வெளிநாடுகளிலிருந்து தாய் நாட்டுக்கு வருகின்ற உள்ளூர் பிரமுகர்களுக்கு ஒரு வழிகாட்டியாக மாறுவது அவனின் பிரதான தொழில்!

போக்கு வரத்துக்கான வாகன ஒழுங்குகள்

கோயில் குளம் என்று குடும்பத்தினருடன் செல்லும் சுற்றுலாக்கள்

அவைமாத்திரமன்றி "இதர" பல சமாச்சாரங்களையும் கச்சிதமாய் செய்து முடிப்பதில் வல்லவன்.

பெரும்பாலான வெளிநாட்டுக்காரர்கள் தமது உள்ளூர் சுற்றுலாக்களுக்கான "ஹைட்டாக" சுப்பனை நியமிப்பதன் இரகசியமும் அதுதான்!

இதனால் சுப்பனின் நண்பர்களுக்கு என்ன இலாபம்?

இலாபம் இருக்கின்றது.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் தாங்கள் கொண்டு வருகின்ற "வெளிநாட்டுப் போத்தல்களுடன்" செல்கின்ற உள்ளூர் கடற்கரைக் சுற்றுலாக்களின் போது சுப்பன் தனது நண்பர்களையும் இணைத்துக் கொள்வது வழமை!

வெளிநாட்டுச் சரக்கை ருசி பார்ப்பதற்கு கிடைக்கின்ற அவ்வரிய சந்தர்ப்பங்களை சுப்பனின் நண்பர்களும் தவற விடுவதில்லை! போத்தல்கள் வெறுமையானதும் அவ்வெற்றுப் போத்தல்களில் தண்ணீர் ஊற்றிக் குலுக்கிக் குடிப்பவர்க ளும் சுப்பனின் நண்பர்களில் அடக்கம்.

நாலு நண்பர்களையும் நோக்கி இப்போது சுப்பன் ராஜநடை நடந்து வருகின்றான்.

அவர்களின் முகங்களில் ஆனந்த தாண்டவம்!

"மச்சான் ஒரு நல்ல பார்ட்டி மாட்டியிருக்கு. இண்டைக்கே கொண்டாட்டத்த தொடங் குவம்"

சுப்பனின் நண்பர்களுக்கு ஆச்சரியம்!

பொதுவாக வெளிநாட்டுக் காரர்கள் ஊருக்கு வந்து ஒரு வாரமாவது கடந்த பின்னர்தான் இந்த மாதிரியான கொண்டாட் டங்கள் தொடங்குவது



வழமை. ஏனெனில் வந்த தொடக்க நாட்களில் கோயில்இ குளம் என்று குடும்பத்தினருடன் சுற்றி "இந்த வெயில் தாங்கலப்பா" என்று பெண்களும் குழந்தைகளும் சலிப்படையும் போதுதான் எஜமானர்களின் கடற்கரை சுற்றுலாக்கள் ஆரம்பிப்பது வழக்கம்!

"ஏன்டா சுப் இண்டைக்கே?"

சுப்பனின் நண்பர்களில் ஒருவன் கேட்கின்றான்.

"அதெல்லாம் உனக்குத் தேவையில்ல. பார்ட்டிக்கு வாறியா மாட்டியா?"

"வாறோம். வாறோம்."

நால்வரும் ஒருமித்துப் பதிலளிக்கின்றனர்.

அன்றைய தினம் சுப்பனின் நடத்தையிலிருந்த மாற்றத்தை நால்வரும் கவனிக்கவில்லை. சுப்பன் ஊற்றி ஊற்றிக் கொடுத்தானே தவிர தான் அதிகம் குடிக்கவில்லை. குறைந்தது இரண்டு நாட்களுக்குப் போதை இறங்காத அளவுக்கு அவர்களைப் போதையேற்றி அப்படியே உறங்கிப் போகச் செய்தான்.

அன்றைய காலைப் பொழுதும் விடியத் தொடங்குகிறது. நண்பர்கள் நால்வரும் அரையில் கட்டியிருந்த சாறம் அவிழ்ந்தது கூடத் தெரியாமல் கால் கைகளைப் பரப்பியபடி உறங்கிக் கிடக்கிறார்கள்.

சுப்பனின் கைத்தொலைபேசி "தைரியமாகச் சொல் நீ மனிதன்தானா?" பாடல் இசையைப் பின்னணியாக்கிச் சிணுங்கிறது.

சுப்பன் அரக்கப் பரக்க எழுந்து கைத்தொலைபேசியுடன் மறைவிடத்திற்கு செல்கிறான்.

சுப்பனின் தொலைபேசியில் இப்போது வேறொரு கரகரத்த குரல்.

"எல்லாம் ரெடியா?"

"ஓமய்யா"

"பெடியள்"

"ஓமய்யா அவங்களப் பிளட்டாக்கி ரெடியா வச்சிருக்கன்"

"கமரா?"

"இருக்கய்யா. சுப்பர் குவாலிட்டி அன்றொய்ட். போனமுறை நீங்க குடுத்தது"

"பெட்டை..?"

"அது பாக்கலாம் ஐய்யா" "சுப்பா ஏமாத்து வேல ஏதாவது விட முயற்சிக்காத. பிறகு உயிரோட இருக்க மாட்டாய்"

"இல்ல ஐயா. உங்கள ஆராலயும் ஏமாத்தேலுமே?"

"என்னைப் புழுகிறத விட்டுட்டு வேலையச் சரியாச் செய். றியல் சோவெண்டு சொல்லிக் கோடிக் கணக்கில வாங்கிப் போட்டன். உனக்கும் அள்ளி எறிவன். சொன்னதை ஒழுங்காச் செய்து முடி"

"சரியய்யா"

"ஏழரைதானே நேரம்?"

"ஓமய்யா"



"சரி நான் ஒரு அஞ்சு
நிமிசம் இருக்கேக்க போன்
பண்ணுறன்"

சுப்பன் இப்போது நண்பர்கள் நால்வரையும் தண்ணீர் தெளித்து எழுப்புகின்றான். அவர்கள் எழுந்து. பின் தள்ளாடி. பின் நிதானித்து.. வாய் பிதற்றிக் கொண்டிருந்தனர்.

சுப்பன் எதிர் பார்த்ததும் அதனைத்தான்!

சுப்பன் அவர்கள் நால்வரிடமும் இரகசியமாக ஏதோ முணுமுணுக்கிறான்.

"ஐயோ நான் இந்தப் பாவத்தச் செய்ய மாட்டன்"

ஒருவன் பயத்தில் கத்துகிறான்.

"ஏய் கத்தாதயடா இதில என்ன பாவம்? ஆண்டவன் படைச்சதெல்லாம் மனிஷன் அனுபவிக்கத்தான்"

"இருந்தாலும் பள்ளிக் கூடத்தில படிக்கிற பிள்ளய."

அவன் வாய் பிதற்றி.. குப்புற விழுந்து மீண்டும் உறங்கிப் போகிறான்.

"அவன விடு குப்பண்ண.. நாங்க இருக்கிறம். பெட்டய மட்டும் காட்டு"

சுப்பனுக்கு இப்போது கோபம் வருகிறது.

"எத்தின தரமடா சொல்லுறது? பேசாம மேற்கயிருந்து பெடியள தக்கி இருக்கலாம்"

"இல்லண்ண. இல்லண்ண. நாங்களே. நாங்க இருக்கோண்ண ஒனக்கு. பெட்டய மட்டும் காட்டு"

"டேய் பெட்ட ஆராயிருந்தா எங்களுக்கென்ன? இப்ப பள்ளிக் கூடம் துடங்கிற நேரம். றோட்டுக் கரேல பத்தேக்க மறைவா நில்லுங்கோ. தள தளப்பா ஆர் வந்தாலும் தூக்கிக் கொண்டு வாங்கோ"

சில நிமிடங்கள் நத்தை வேகத்தில் நகர்ந்த பின்னர் அந்த மிருகங்களின் வெறியாட்டம் நடந்தேறுகிறது. நான்கு வேட்டை நாய்களிடம் அகப்பட்ட அந்த சின்ன முயல் குட்டி தன்னால் முடிந்த வரை போராடி மடிகிறது. மடிந்தது கூட

அந்த நாய்களுக்குத் தெரியவில்லை.

சுப்பனின் புத்தம் புதிய குவாலிட்டி அன்ரோய்ட் போன் அத்தனை வேட்டையையும் படம் பிடித்து நேரடி ஒளிபரப்புச் செய்கிறது.

"video has been send successfully" என்ற செய்தியை குப்பன் அன்ரோய்ட் போன் திரையில் பார்க்கும் கணத்தில் "தைரியமாகச் சொல் நீ மனிதன்தானா?" என்ற பாடலை பின்னணியாக்கி ஒலிக்கிறது.

---

எமதர்ம ராஜாவின் கண்களிலிருந்து தீப்பொறி பறக்கிறது.

"குப்தா என்னால் நம்ப முடியவில்லை. கட்டிய மனைவியைத் தவிர மற்றைய அனைவரையும் அன்னையாகவும் தங்கையாகவும் மதிக்கும் மக்கள் வாழ்ந்த தேசமல்லவா அது? இப்போது என்னவாயிற்று? இந்த நிலைமைக்கு என்ன காரணம்?"

"பல காரணங்கள் இருக்கின்றன பிரபு"



"குப்தா! நான் ஏற்கனவே அடங்காத கோபத்தில் இருக்கின்றேன். நீயும் நீட்டி முழக்காமல் நறுக்கென்று விஷயத்தைச் சொல்"

"பிரபு சுந்தர தேசத்தின் கலாச்சாரத்தை அழிப்பதற்கென்றே ஒரு கூட்டம் செயற்படுகின்றது. இதுவொரு நீண்ட காலத் திட்டம். தற்போது கச்சிதமாக நிறைவேற்றப்படுகிறது. பல முகவர்களும் அவர்களுடன் இணைந்து செயற்படுகிறார்கள்"

"அது யாருடைய திட்டம்? யார் அந்த முகவர்கள்?"

"திட்டமிட்டவர்கள் பற்றி நான் இங்குரைப்பது பொருத்தமல்ல பிரபு. அதனை நான் பின்னர் உங்களுக்கு உரைக்கின்றேன். முகவர்களாக உள்ளூர்க்கா ரர்களும் செயற்படுகிறார்கள் பிரபு!"

"சரி. சரி. அதனைப் பிறகு நாம் பேசிக்கொள்வோம். இந்த மானிடன் போன்ற காமுகர்கள் தோன்றுவதற்கு காரணம்தான் என்ன?"

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஔவையின் வாக்கிற்கு உதாரண தேசமாக இருந்தது சுந்தர தேசம். ஆனால் இப்போது அங்கு கோயில்களை விட மதுபானக் கடைகள்தான் அதிகம் பிரபு"

"ஏன் அப்படி?"

"சுந்தர தேசத்தின் மக்கள் பிரதிநிதிகள்தான் காரணம். மதுபானச் சாலைகள் அமைப்பதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பேரரசு அவர்களுக்குத் தாராளமாக வழங்குகின்றது. அவர்களும் அதனைப் பெற்று தமது மாமன் மச்சான் மருமகன் என்று அனைவரையும் மதுபானக் கடைகளின் முதலாளிகளாக்கி கோடீஸ்வரர் ஆக்குகிறார்கள்"

"அப்போ மக்களின் கதி"

"அதோ கதிதான்" இளைஞன் சொல்லி விட்டுச் சிரிக்கிறான்.

"மானிடனே நீ அமைதியாக இரு. தொலைத்து விடுவேன்! குப்தா நீ தொடர்ந்து சொல்"

"அதனை விடவும் கஞ்சா அபின் ஹெக்ரெயின் எனப் போதைப் பொருட்களும் தாராளமாக விற்பனையாகின்றன. இது போதாதென்று மாவாப் பாக்கு என்னும் ஒரு வகையான போதை தரக் கூடிய பாக்கை பள்ளிச் சிறுவர்களுக்கும் விற்பனை செய்கிறார்கள் பிரபு"

"என்ன? பள்ளிச் சிறார்களுக்கு போதைப் பொருட்களை விற்பனை செய்கிறார்களா? பாவக் கணக்குப் புத்தகத்தில் வரவு வைத்து விட்டு அப்பாதகர்களை உடனடியாக இங்கு அழைத்து வர முடியாதா? குப்தா!"

"அது சாத்தியம் இல்லை பிரபு! பாவக் கணக்குப் புத்தகங்களை ஆராய்ந்து சரி பார்ப்பதற்காக கணக்காய்வாளர்கள் இப்போது அடிக்கடி எமலோகம் வருகிறார்கள் பிரபு"

"ஆ. என் இரத்தம் சூடாகிக் கொதிக்கிறதே! முதலில் இவன் கதையை முடித்து விடுகின்றேன்!"

எமதர்ம ராஜா தனது கையிலிருந்த கதாயுதத்தை உயர்த்தியபடி அந்த மானிடனை நோக்கிப் பாய்கிறார்.

"வேண்டாம் மகாராஜா. வேண்டாம். எமதர்மன் தவறிழைத்தான் என்ற பழிச்சொல் உங்களுக்கு வேண்டாம். விசாரணைகளை நிறைவு செய்த பின்னர் தண்டனை வழங்குவது தானே எங்கள் மரபு!"

"நல்ல வேளை எடுத்துரைத்தாய் குப்தா! சினத்தால் சற்று மதி இழந்து விட்டேன். மானிடனே சொல் நீ செய்த குற்றங்களை ஒப்புக் கொள்கிறாயா?"

"ஆமாம் ஐயா. ஆனால் அக்குற்றத்திற்கு நான் பொறுப்பாளி அல்ல"
"என்ன? நீ பொறுப்பாளி இல்லையா?"
"ஆமாம். நான் பொறுப்பாளியல்ல. நான் வெறும் அம்பு. எய்தவன் வேறொருவன். உங்களுக்கும் அது தெரியும்தானே"
"தந்திரமாகப் பேசுவதாக நினைக்கின்றாயா மானிடனே? நீ பகுத்தறிவுள்ள மனிதன். அதனை மறந்து பேசாதே"
"பிரபு. இந்த மானிடர்களே இப்படித்தான்! வெறும் பேச்சு வல்லமையினாலேயே தம் காரியங்களைச் சாதித்து விடுவார்கள். தாங்கள் விசாரணையை நிறைவு செய்து தண்டனையை அறிவியுங்கள் பிரபு"
"சற்றுப் பொறு குப்தா! நான் இன்னும் சில விடயங்களை இவனிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது"
"என்னை மன்னியுங்கள் பிரபு"
"மானிடனே அந்தக் குப்தன்"
"ஐயோ நான் இல்லை பிரபு. சுப்பன்!" சித்ரகுப்தன் குறுக்கிட்டுக் கத்துகிறான்.
"ஆமாம். ஆமாம். சுப்பன்! அவன் ஏன் இந்த இழி செயலைச் செய்யத் துணிந்தான்?"
"அது. வந்து" இளைஞன் பதில் சொல்லத் தயங்கி முழித்தபடி நிற்கிறான்.
"பதில் சொல் மானிடனே"
"அது ஒரு இன்டர்நஷனல் டீலிங் பிரபு"
"குப்த் அது என்ன இன்டர்நஷனல் டீலிங்?"
"சர்வதேச ரீதியிலான ஒரு ஒப்பந்தம். பேரம் பேசுதல்"

"எது எதற்குப் பேரம் பேசுவதென்ற விவஸ்தையே இல்லாமல் போய் விட்டது. சரி சுப்பன்தான் பணத்திற்காக செய்தானென்றால் இந்தத் தரங் கெட்டவனும் இவனது கூட்டாளிகளும் ஏன் உடந்தையாக இருந்தார்கள்?"
"சுப்பன் எங்களை நன்றாகக் குடிக்க வைத்து ஏமாற்றி விட்டான். நாங்கள் அன்றிருந்த நிலையில் அந்தத் தெருவால் கண்ணகியே வந்திருந்தாலும் கதறக் கதறக் கற்பழித்திருப்போம்"
"போதும் நிறுத்தடா! குப்த் இவன் பேச்சைக் கேட்டாயா?"
"ஆமாம் பிரபு. கொலையாளியை விடவும் கொலைக்கு உடந்தையாக இருப்பவன்தான் பெரும் குற்றவாளி"
"என்னை மன்னித்து விடுங்கள் பிரபு"
"என்ன? மன்னிப்பா? உனக்கா?"
எமதர்மன் எமலோகமே அதிர வாய் விட்டுச் சிரிக்கிறான். இளைஞன் பயத்தால் சிறுநீர் கழிக்கிறான். எமதர்ம ராஜா வழங்கப் போகின்ற தண்டனைக்காக எம லோகமே ஆவலுடன் காத்திருக்கின்றது.
எமதர்ம ராஜா சித்திரகுப்தனின் காதுக்குள் ஏதோ முணுமுணுக்கிறார்.

சித்ரகுப்தனின் முகம் ஆச்சரியத்தாலும் சந்தோஷத்தாலும் மலர்கிறது.
"என்ன தண்டனை சித்ரகுப்தனாரே?" காவலன் ஒருவன் ஆவல் தாங்க முடியாமல் கேட்கிறான்.
"அதுவா? அது. வந்து. மூங்கில் குழாய் தண்டனை"
"மூங்கில் குழாய் தண்டனையா? அது என்ன?"
எல்லோரும் குழம்பிப் போய் நிற்கிறார்கள். சித்ரகுப்தன் விளக்கிச் சொல்கின்றான்.
"முக்கால் அடி நீளமான மூங்கில் குழாய் ஒன்றை எடுக்க வேண்டும். அதன் ஒரு பக்கத்தைக் காற்றுக் கூடப் புக முடியாதவாறு துணியினால் மூடி அடைக்க வேண்டும். ஒரு சிறங்கையளவு கட்டெறும்பையும் கொள்ளியெறும்பையும் மூங்கில் குழாய்க்குள் உயிருடன் விட வேண்டும்"
"அதன் பிறகு அதன் பிறகு"
மக்கள் ஆனந்தத்தால் ஆரவாரம் செய்தனர்.
"அப்படியே மூங்கில் குழாய்க்குள் செலுத்தி வேறொரு துணியினால் இறுகப் பிணைத்துக் கட்டி விட வேண்டும்"
"சிறு நீர் கழிப்பதென்றால்?"
"கழிக்கட்டும்"
"எறும்புகள்.!"
"கடிக்கட்டும்"
"மூங்கில் குழாயைக் கழற்ற முடியாதே!"
"வெட்டி விட வேண்டியதுதான்"
"மூங்கில் குழாயையா?"
"மூங்கில் குழாயையும்"
"ம். சேவகர்களே இழுத்துச் செல்லுங்கள் இவனை"
"வேண்டாம். வேண்டாம்"
மானிடன் பயத்தால் கத்துகின்றான்.
சேவகர்கள் அவனை இழுத்துச் செல்கிறார்கள்.
(விசாரணைகள் தொடரும்)



# பிரண்டை மருத்துவம்

தொகுப்பு:
தயிர்மேந்திரராஜா

பிரண்டை என்பது ஒரு ஆயுர்வேத மூலிகை ஆகும். எலும்பு மற்றும் மூட்டுகளின் வலி மையை அதிகரிக்கவும், எலும்பு வளர்ச்சியை அதிகரிக் கவும் பிரண்டை பயன்படுகிறது. இது எலும்பின் அடர்த்தியை அதிகரிக்க உதவுகிறது மற்றும் எலும்பு முறி விற்கான சிகிச்சையை குணப்படுத்தும் விகிதத்தை அதிகரிக்கிறது. எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைகளைத் தவிர, பசியின்மை, அஜீரணம், மூலம், குடல் புழுக்கள், கீல்வாதம், உட்புற இரத்தப்போக்கு, வெள்ளைபடுதல் போன்ற பிரச்சைகளுக்கும் பிரண்டை சிறந்த தீர்வளிக்கிறது. மனிதனின் சகிப்புத்தன்மையையும், உற்சாகத்தையும், வலிமையையும் மேம்ப டுத்துவதற்கும் இது பயன்படுகிறது. பிரண்டையின் சமஸ்கிருத பெயர், அஸ்திசம்ஹரகா.

பிரண்டை: இதன் பொருள் எலும்புகளை பிணைப்பது என்பதாகும். பிரண்டை சாற்றை தினமும் இரண்டு முறை 20 மிலி பருகுவதால் எலும்பு முறிவிற்கான சிகிச்சை விகிதத்தை அதிகரிக்கும் என்று ஆயுர்வேதத்தில் கூறப்படுகிறது. மேலும் எலும்புத் தாது அடர்த்தி குறைவு, எலும்புத் துளை நோய் போன்றவற்றால் பாதிக்கப்படும் எலும்பு வலிமையை மறுசீரமைக்க உதவுகிறது. பிரண்டை தூளை வெதுவெதுப்பான நீரில் கலந்து வெளிப்புறம் தடவுவதாலும், மேலே கூறிய எலும்பு வலிமை அதிகரிக்கப்படுகிறது. மருத்துவ குணங்கள் பிரண்டையின் இலைகள் மற்றும் தண்டுகள் எலும்பு மற்றும் மூட்டு தொடர்பான பிரச்சனைகளின் மருத்துவ சிகிச்சைக்கு பயன்படுகிறது.

உகந்த அளவு கொழுப்பு இருக்கும் ஒருவருக்கு எலும்பு வளர்ச்சி நன்றாக இருக்கும் என்பது ஆயுர்வேதத்தின் கருத்து. இன்றைய நவீன ஆராய்ச்சிகளும் இதே தான் கூறுகின்றன. கொழுப்பைக் கரைக்க ஆயுர்வேதத்தின்படி, பிரண்டை வளர்சிதையை அதிகரித்து உடலின் கொழுப்பு அளவைக் குறைக்கிறது.

இதனால் உடலில் உகந்த அளவு கொழுப்பு சேர்க்கப்பட்டு, எலும்பு வலிமையை அதிகரிக்க உதவுகிறது. இதனால் எலும்பின் எடையும் அதிகரிக்கிறது. இதனால், அடிவயிறு, இடுப்பு, பிட்டம் , தொடை போன்ற இடத்தில் படியும் கொழுப்பு குறிப்பிட்ட அளவு குறைகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அங்குல இழப்பு மற்றும் வயிற்று கொழுப்பு குறைப்பு ஆகியவை கண்காணிக்கப்படுகின்றன. ஆனால் உங்கள் எலும்பு பலவீனமாக இருக்கும் வரை, உடலின் கொழுப்பு அளவு மிகக் குறைந்த அளவே குறைக்கப்படுவதாக அறியப்படுகிறது. ஆயுர்வேதத்தில், எலும்பின் எடையை அதிகரித்த பின்பே கொழுப்பு அளவைக் குறைக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

உங்கள் எலும்புகள் பலவீனமாக இருக்கும் வரை ஒட்டுமொத்த உடல் எடை குறைப்பு கணிசமாக இருக்காது. ஏனென்றால் உங்கள் எடை எலும்புகளுக்கு மாற்றம் செய்யப்படும். தொடர்ந்து பல நாட்கள் பிரண்டையை எடுத்துக் கொள்வதால், உங்கள் உடலின் ஒட்டு மொத்த எடை குறைகிறது. உங்கள் எலும்புகள் வலிமை அடையும் வரை பொறுத்திருந்து பின்புதான் இந்த எடை குறைப்பு தொடங்குகிறது. எலும்புகளுக்கு தேவையான ஊட்டச்சத்துகள் முற்றிலும் கிடைக்கப்படுகின்றன. பிரண்டையில் அநோடின் மற்றும் அழற்சி எதிர்ப்பு தன்மை உள்ளது. இதனால் மூட்டுகளில் உண்டாகும் அழற்சி மற்றும் வலி குறைகிறது. பிரண்டை பயன்பாட்டால், மூட்டுகளின் இயக்கத்தில் முன்னேற்றம் இருப்பதாகவும், விளையாட்டு வீரர்களின் கடின பயிற்சியால் உண்டாகும் வலி குறைவதாகவும் அனுபவபூர்வ விளக்கங்கள் கிடைத்ததாக சில ஆய்வுகள் கூறுகின்றன. பிரண்டையின் பாகங்களில் செரிமான வினைகள் உள்ளன.

செரிமான ஆற்றல் மற்றும் கல்லீரல் செயல்பாட்டை மேம்படுத்துகிறது. பிரண்டையின் இலைகளை துவையலாக அரைத்து அல்லது காய்கறிகளுடன் சமைத்து உட்கொள்வதால் செரிமானம் சீராகிறது என்று பாட்டி வைத் தியம் கூறுகிறது. பாரம்பரிய மருத்துவத்தில், பிரண் டையின் தண்டுகளை தூளாக்கி அதனுடன் சம அளவு இஞ்சி தூள் சேர்த்து தயாரிக்கும் மருந்து பசியின்மைக்கு சிறந்த தீர்வைத் தருகிறது. 2.5மூ கெட்டோஸ்டீராய்டுகள் கொண்ட பிரண்டையின் தனியுரிம சாறு பசியை கட்டுப்படுத்தவும் எடை இழக்க உதவுவ தாகவும் கருதப்பட்டது. இருப்பினும், உண்மையில் பசியின்மையைத் தீர்ப்ப தற்கான விளக்கங்கள் இன்னும் அறியப்படவில்லை ஆனால் எடை இழப்பிற்கு உதவுகிறது. பசியைத் தூண்ட இரண்டாவதாக, பசியை அதிகரிக்க பயன்படும் ஒரு பாரம்பரிய தயாரிப்பானது இஞ்சி தூளைக் கொண்டிருக்கிறது, இஞ்சி ஒரு சக்தி வாய்ந்த பசி தூண்டும் உணவுப் பொருளாகும். கீல்வாதம் மூட்டு இயக்கத்தை மேம்படுத்த பிரண்டை ஒரு துணை மருந்தாக செயல் படுகிறது

# மூளைக்கு வேலை

4 0,5

**இடமிருந்து வலம்**

1. எம் நாட்டில் சிக்கலான பதவியாகப் பேசப்பட்டது.
4. துன்பங்களுக்கு எல்லாம் அடிப்படைக் காரணம்
6. துக்கத்தின் நிறம் சிலருக்கும் பிடிப்பாகவும் எடுப்பாகவும் இருக்கும்
7. துறவிகளின் ஆடை. கறை என்றும் கூறலாம்
8. கங்கை வருண தெய்வங்களின் வாகனம் யாழ் இசைக்கருவி ஒன்றின் பெரும் கூட கடைசி எழுத்து விடப்பட்டுள்ளது.
10. வானிலும் திரையிலும் ஜொலிக்கும் இறுதி எழுத்து விடப்பட்டு ஜொலிக்காமல் கிடக்கிறது.
11. இது இன்றி பார்வை ஏது.
12. காட்டு ராஜா திருப்பி நிற்பது மட்டுமல்லாமல் இறுதி எழுத்தையும் இழந்து நிற்கிறார்
14. வயோதிபத்தில் இது விழுந்தால் வளைந்து தானே நிக்க வேண்டும். எழுத்து திரும்பியும் நிற்க வேண்டுமா?
15. வகை
16. தேசம் திரும்பி விட்டது.
18. கண்ணீரோடு சேர்ந்து வரும் விம்மல்
21. உறுதி கலைந்து போய் உள்ளது.
23. திக்கு
24. இணக்கம் தெரிவித்தல்

**மேழ் இருந்து கீழ்**

1. 2003 இல் விக்ரம் சூரியா நடித்து வெளிவந்த திரைப்படம்
2. இதனாலும் கூரை வேயப்படுவதுண்டு (இறுதி எழுத்து குற்றிழந்துள்ளது)
3. அடையாளம்
4. உயிரினங்களின் அடிப்படை தேவைகளில் ஒன்று



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ர | 2 | 3 | ர் | | 4 | 5 |
| | | 6 | ரு | மை | | | வி |
| 8 | 9 | ர | | | 10 | ர | |
| 11 | ண் | ம | ணி | | 12 | ம் | 13 |
| 14 | | | | 15 | | | வ |
| | 16 | 17 | | 18 | ம் | 19 | லை |
| 20 | | 21 | 22 | ட | | | |
| 23 | சை | | 24 | ம் | ம | | ம் |

**மூளைக்கு வேலை 04 – விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச 1 | க் | தி 2 | | வா 3 | ணி 4 | | ச 5 |
| த் | | ண் | | ழை 6 | ச | | ங் |
| தி 7 | ம 8 | ண | ரு | ம் | | ச 9 | கி |
| ர 10 | த | ம் | | 11 ம | கா 12 | | லி |
| ம் 13 | ம் | | க 14 | ர | க | ம் 15 | |
| | | ஆ 16 | டி | | ம் 17 | த | நா 18 |
| ல் 19 | ப 20 | ம் | த | சி 21 | | டு 22 | ளை |
| ஆ 23 | சு | | ம் 24 | ப | ம் | கு | |

1. வி.கயல்விழி – திருகோணமலை
2. க.விக்னேஸ் – வவுனியா
3. ர.தரங்கிணி – மன்னார்

சரியான விடைகளை, எமது வழமையான முகவரிக்கு அல்லது அமுதநதி முகநூல் உள்பெட்டிக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250/-, 150/-, 100/- வழங்கப்படும்

5. வேகம் தலைகீழ்
9. தெளிவு என்று பொருள் கொள்ளலாம்
10. எந்த செயலையும் தொடங்கும் போது இது நேர்ந்தால் தவிக்க நேரிடும்
13. தோல் நிறத்தவர்களையும் இப்படி கூறுவார்கள்
15. நகைச்சுவை
17. நான் என்பது இதுவாகும் போது பொது நலமாகும்
19. சொல் குழம்பியுள்ளது
20. எம் வாழ்க்கை இதன் கையிலே
22. பலர் வாழ்வைக் கெடுப்பது அதனால் தான் தலைகீழாக நிற்கின்றது.


அழுதநதி சஞ்சிகையில்
மிகக் குறைந்த செலவில்
விளம்பரங்கள்
செய்து கொள்ளலாம்

தொடர்புகளுக்கு..

077 264 02 02



வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் முகமாக...

ஒரே ஒரு SMS தருகின்றோம்

1000/- ரீலோட்

நீங்கள் செய்யவேண்டியது. "அடுத்த வீட்டில் தூள் வசிக்கிறாள்"

எனும் வரி இச்சஞ்சிகையில் எந்த ஆக்கத்திலுள்ளது?

என்பதைக் கண்டுபிடித்து அவ்வாக்கத்தின் தலைப்பை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு உங்களுடைய பெயர். முகவரியுடன் குறுஞ்செய்தி அனுப்புங்கள்.

076 6431950

குறித்த காலாண்டு வரைக்கும் SMS அனுப்பலாம், ஒருவர் ஒரு SMS மாத்திரமே அனுப்பமுடியும், காலாண்டின் இறுதியில் குலுக்கல் முலம் தெரிவு செய்யப்படும் அவரின் குறித்த தொலைபேசி இலக்கத்திற்கு 200 ரூபாய் பெறுமதியான ரீலோட் பரிசாக வழங்கப்படும்

பிரதான அனுசரணை: கூடிய தரம்! குறைந்த விலை!

VIJAY PRINTING PRESS

இல: 172, மில் வீதி, வவுனியா. 077 900 9491 / 024 222 5799

சென்ற இதழுக்கான சரியான விடையை அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யபட்டு தலா 200ருபாய் ரீலோட்டை பரிசாகப் பெற்ற அதிர்ஷ்டசாலிகள்

- யோ.அபிராமி வவுனியா.
- கண்ணன் கனகராயன்குளம்
- ச.பிரபஞ்சா மன்னார்.

முற்றத்து மல்லிகை

# வரட்சிக்கு ஏற்ற மூடாக்கலும் கைகொடுக்கும் சேதன உரங்களும்

ஸ்ரனி அன்ரனி

இன்று காலநிலை மாறியுள்ளது. பச்சைவீட்டுவாயுக்கள் வளிமண்டலத்தில் அபரிமிதமாக அதிகரித்து விட்டன. வரண்ட காலநிலையும் வரட்சியும், பருவம் தவறிப்பெய்யும் மழையும், பருவமழை பொய்த்தலும்,இன்று சர்வ சாதாரண விடயங்களாகி விட்டன. மனிதன் விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், அதிக இலாபமீட்ட வேண்டும் என்ற அவாவினால் பல் வேறு வகையான இரசாயன உள்ளீடுகளைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டான். மண், நீர், வளிமண்டலம் என்பவற்றையும், மனித சுகாதாரம், சுற்றுச்சூழல் என்பவற்றையும் அதிகம் பாதித்து விட்டது. வரட்சியும் நீரின்மையும் விவசாயத்தில் பெரும் சவாலாக மாறிவிட்டது.இதிலிருந்து மீளுவதற்கு மனிதன் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றான்.

இவ்வாறான முயற்சிகளுள் வெற்றியளித்த முயற்சியாக மூடாக்கு அல்லது தரையை மூடிய விவசாயம் முக்கியமானது. நீரிழப்பைத் தவிர்த்து நீரை சேமித்து வைப்பதற்கு உகந்த முறையாகக் கருதப்படுகின்றது. இயற்கைப் பொருட்களாலோ அன்றி செயற்கைப் பொருட்களாலோ மட்போர்வையை மூடிய நிலையில் பயிரிடல் இதன் மூலம் நடைபெறுகின்றது.

செயற்கைப் பொருட்களிலும் பார்க்க இயற்கைப் பொருட்கள் மண்ணுக்குக் கேடு விளைவிப்பனவல்ல இவற்றை மண்ணிற்கு இடும் போது மண்ணிற்குப் போசணையை வழங்குவ துடன் கோடிக்கணக்கான நுண்ணங்கிகளின் வாழிடமா கவும் அமைந்து விடுகின்றது.



நமது உலகை நோக்கின் மனிதருக்கு மட்டுமல்ல பல கோடி உயிரினங்களுக்கும் பொதுவானது. ஆனால் மனிதன் தான் இதை ஆள்வ தாகவும் ஆட்டிப் படைப்பதாக வும் எண்ணுகின்றான். ஆனால் உண்மை அதுவல்ல இந்த உலகை ஆள்வதும் ஆட் டிப்படைப்பதும் பூச்சிகளும்,

கண்ணுக்குத் தெரியாத நுண் ணங்கிகளுமே ஆகும். இது எத்தனை பேருக்குப் புரிகின் றது. நுண்ணங்கிகள் என் றாலே ஆபத்தானவை, மனிதனுக்கு எதிரானவை என்ற பொதுவான எண்ணம் எம்மிடையே உண்டு. ஆனால் அது நிஜமல்ல இவற்றுக்கு மேலாக நன்மை செய்யும் நுண்ணயிரிகளும் உண்டு என்பதை எவரும் மறந்து விடலாகாது. நன்மை செய்யும் நுண்ணங்கிகளின் தொகை அதிகரிக்கும் போதுதான் விவசாயம் செழிக்கின்றது. தரையில் மூடு பொருட்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் முறை தற்போது விரிவடைந்துள்ளது. செயற்கைப் பொருட்க ளைத் தவிர்த்து இயற்கைப் பொருட்களை மூடுபொருளாகப் பயன்படுத்தும் போது பல நன்மைகள் உண்டு.

1. நீர் ஆவியாதலைத் தடைசெய்வதுடன் நீர்பற்றும் திறனை மேம்படுத்தல்.

2. பயிருக்கு இயற்கையாகக் கிடைக்கின்ற போசணைப் பதார்த்தங்கள் கிடைப்பதுடன், மண்ணின் தரமும் மேம்படல்.

எனவேதான் இயற்கை மூடுபொருட்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்வ தென்பது இயற்கையைப் பாதுகாத்துக் கொண்டே உற்பத்தியிலீடுபடுதல் என்று பொருள். பயிர்ச் செய்கையில் பருவகாலப்பயிர்கள், பல்லாண்டுப் பயிர்கள் வகைப்படுத்திப்படுத்திப் பயிரிடுகின்றோம்.

பருவகாலப்பயிர்ச்செய்கையின் போது இயற்கையாகவே கிடைக்கின்ற இலைத ழைகள், சருகுகள், தாவரக்கழிவுகள், விளைபொருட்களின் மிகுதிகள், பண்ணைக்கழிவுகள் போன்றவற்றைப் பயன்படுத்துகின்ற போது நுண்ணங் கிகளின் பெருக்கம் அதிகரிப்பதுடன் இப்பொருட்கள் உக்கலடைந்து நல்ல நீர்வடிப்பு, நீர்பற்றும் திறன் என்பவற்றை அதிகரித்து விடுகின்றன. ஒருதடவை பாய்ச்சப்படுகின்ற நீர் நீண்ட நாட்களுக்கு மண்ணில் சேமிக்கப் படுவதுடன் நீரையும் எம்மையும் பாதுகாக்கின்றன.

பெரும்பாலும் அறுவடைமிகுதிகள் உற்பத்திக்கழிவுகள் என்பவற்றை தீயிட்டுக் கொழுத்தி விடுகின்றோம் இது முற்றிலும் தவறான செயல்.இதனைத் தவிர்த்து இவற்றை மண்ணிற்கு இடும் போது மண் வளமடைகின்றது. பயிர் வளர்ச்சிக் காக நாம் இடும் உள்ளீடுகள் மற்றும் மண்ணில் இயற்கையாகவே உள்ள சத்துக்கள் ஆகியவற்றைப் பயிர்கள் நேரடியாக உள்ளெடுப்பதில்லை.பயிர்கள் அவற்றைச் சுலபமாக எடுக்கும் வகையில் சத்துக்களை இளக்கிக் கொடுக்கும் பணிகளை நுண்ணங்கிகளே செய்கின்றன. இவை மண்ணில் இல்லாவிட்டால் நாம் எவ்வளவு பசளை போட்டாலும் அவற்றால் பயிர்களுக்கு எந்தப் பயனும் கிடையாது.உதாரணமாக றைசோபியம் போன்ற பக்டீரியாக்கள் வளிமண்டல நைதரசனை உறுஞ்சி நிலத்தில் பதிக்கின்றன.இவை சராசரியாக ஒரு ஏக்கரில்

10கிலோகிராம் தொடங்கி 30கிலோகிராம் அளவான நைதரசனை மண்ணில் நிலைநிறுத்துகின்றன.இதே போன்றே பொட்டாசியம்,பொஸ்பரஸ் போன்ற சத்துக்களைப் பெற நுண்ணங்கிகளே துணைபுரிகின்றன.முன்பு அழுகல் நோய் என்பது ஒரு காலத்தில் சில பயிர்களை மட்டும் தாக்கியது ஆனால் இன்று எல்லாப் பயிர்களையும் எல்லாக் காலங்களிலும் தாக்கும் நோயாக மாறி விட்டது. காரணம் நன்மை செய்யும் நுண்ணங்கிகள் வேகமாகக் குறைவடைந்து தீமை செய்யும் நுண்ணங்கிகள் வேகமாக அதிகரித்தமையே காரணமாகும்.இதற்கு இரசாயன உரப்பயன்பாடும் ஒரு காரணமாகும்.

பல்லாண்டுப்பயிர்களைப் பொறுத்தவரை தென்னை,மா,பலா எனப் பலபயிர்கள் பயிரிடப்படுகின்றன.அண்மைக்காலங்களில் இவற்றின் முக்கியத்துவம் வெகுவாக அதிகரித்துள்ளது. இப்பயிர்ச் செய்கையிலும் மூடாக்கு முக்கியமாகின்றது. உரித்த தேங்காய் மட்டை, வைக்கோல், தென்னைமட்டை, காய்ந்த சருகுகள் என்பன மூடுபொருளாகப் பயன்படுத்த முடியும். இவற்றைத் தாவரத்தின் அடியைச் சுற்றி வட்டமாக மூடிவிடும் போது ஈரலிப்பு நீண்ட நாட்களுக்குப் பேணப்படுவதுடன்,நுண்ணங்கிப்பெருக்கமும் ஏற்படுகின்றது. இது தவிர மண் மென்மையடைதல், ஈவியாக்கம் குறைவடைதல் என்பவற்றுடன் பசளைக்கான செலவு, நீர்ப்பாசனத்திற்கான செலவு என்பவும் குறைவடைகின்றது.

எனவே வரட்சியான பிரதேசங்களுக்கும் நீர்வளம் குறைவான பிரதேசங்களுக்கும் இம்முறை பெரிதும் பயனுடையது என்பதுடன் தற்காலத்தில் நிலவும் மிகைவரட்சி நீர்த்தட்டுப்பாடு மற்றும் பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் என்வற்றுக்கு ஒரு தீர்வாக அமையும் என்பது நம்பிக்கை.

## அமைதியாய் தவம்கிடக்கிறது

என் இதய அறை
விடைபெற்று செல்லும்
வேடிக்கை உலகில்
நிஜமான ஓர் அன்பை
எதிர்பார்த்துக்கொண்டு

கனவுகள் நிறைந்த கண்கள்
விழிகளில் நீந்திடும்
நீரலைகள்.....
வெறுமை கடலில் மூழ்கும்
மௌன மீன்கள்.....

சிறைப்பிடிக்கும் தென்றல்..
தழுவும் தனிமை..
மறக்கப்படும் ஞாபகங்கள்..
உலர்ந்துவிடும் நீர்த்துளிகள்..

ம்...
தவம்கிடக்கிறது
என் இதயம்..
நிதர்சனங்களை எதிர்பார்தபடி..

-அழகு-

# மைதானச் செயற்பாடுகளும்
## தனி மனித ஆளுமை விருத்தியும்

திருமதி.வேணி ரொனால்ட்

ஆளுமை என்பது "ஒருவன் தனக்குரிய முறையில் சூழல் சந்தர்ப்பங்களிற்கேற்ப பொருத்தப்பாடு காணும் தன்மையை நிர்ணயிக்கும் உடல், உள அமைப்பாகும். சுருக்கமாகக் கூறினால் ஒருவரது நடத்தையில் முழுமையான அமைப்பு ஆளுமை ஆகும். ஆளுமையில் முக்கியமானது சமநிலை ஆளுமையாகும். மனிதனது சிந்தனை உணர்ச்சி, செயல், ஆகியவை சமநிலையில் விருத்தியடையும் பொழுது அவன் சமநிலை ஆளுமையைப் பெறுகின்றான். ஒருவன் உறுதியான ஆளுமையுடையவனாக இருக்க வேண்டுமெனில் அவன் சமூக இணக்கமுள்ளவனாக, இணங்குந் தன்மையுடையவனாக, சம்பாசனை பிரியமுள்ளவனாக, சரளமாகப் பேசுபவனாக உணர்வு செம்மையானவனாக தலைமைத்துவம் கொண்டவனாக இருக்க வேண்டும். இவ்வாறு ஆளுமையானது ஒரு மனிதனின் உயிர் நாடி போன்று முக்கியம் பெறுகின்றது.

ஒரு மனிதனுடைய ஆளுமையானது பல்வேறு செயற்பாடுகளினூடாக விருத்தியடைகின்றது. விளையாட்டுக்கள், பாடசாலைப் போட்டி நிகழ்வுகள், குழு நிகழ்வுகள், மொழிப்பாவனை, இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், கலை போன்ற பல்வேறு செயற்பாடுகளினூடாக ஆளுமை விருத்தி ஏற்படுகின்றது. ஆளுமை விருத்தியின் பல்வேறு செயற்பாடுகளும் பல்வேறு தளங்களிலே ஏற்படுவதைக் காணலாம். பாடசாலை, வழிபாட்டுத்தலங்கள், பிறநிறுவன அமைப்புக்கள், மைதானம் எனப்பல்வேறு தளங்களிலும் இன்று ஆளுமை

விருத்தி வளர்க்கப்படுகின்றது. அந்த வகையிலே தனி மனிதனுடைய ஆளுமை விருத்தியிலே மைதானச் செயற்பாடுகள் அளப்பரிய பங்கினை வகிப்பது மறுக்க முடியாத உண்மையாகும். மைதானத்திலே இடம்பெறுகின்ற விளையாட்டுக்கள், உடற்பயிற்சி, முகாமைத்துவச் செயற்பாடுகள் மற்றும் கட்டுக்கோப்புடன் கூடிய ஏனைய மைதானச் செயற்பாடுகளிலே ஈடுபடுவதன் மூலம் ஒரு தனிமனிதனுடைய ஆளுமையானது சிறப்பாக விருத்தியடைகின்றது.

எவ்வாறென நோக்கும் போது மைதானச் செயற்பாடுகளின் மூலம் உடல் மற்றும் உள நலன்கள் விருத்தியடைகின்றன. இவை ஆளுமையை விருத்தியடையச் செய்கின்றன. உடல் நலமே ஒருவனுடைய பல்துறை வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளது. என பன்னெடுங்காலமாக வலியுறுத்தப்படுகிறது. "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்ற பழமொழிக்கிணங்க உடல் ஆரோக்கியமாக இருந்தால் தான் எத்தகைய பணிகளையும் மேற்கொள்ள முடியும். இத்தகைய உடல் நலத்தினை பேண மைதானச் செயற்பாடுகள் பெரும் பங்காற்றுகின்றன. உடல் ரீதியாக ஆளுமை வெளிப்பாடானது ஒரு மனிதனுடைய விருத்திக்கு மிகவும் அவசியமானதாகும். உடல் ரீதியான ஆளுமை பெரிதும் பிரதிபலிக்கப்படுவது மைதானத்திலாகும். உடற்பயிற்சி, விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் ஒரு மனிதன் தன்னைத்தானே சுயமுகாமை செய்து கொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றான். இன்று எமது சமுதாயத்திலே பெரும் புத்திஜீவிகளாக இருக்கும் அனேகமானவர்கள் அறிவில் மட்டுமே ஆளுமை உள்ளவர்களாக இருக்கின்றனர். ஆனால் உடல் அளவில் பலம் இன்றி இளவயதிலேயே பல்வேறு நோய்களிற்கு உட்பட்டவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறானவர்கள் பூரண ஆளுமை உடையவர்கள் அல்ல. மாறாக பல்துறை ஆளுமை என்ற வகையில் உடல், உளரீதியான ஆளுமையை கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். இதைத்தான் அறிஞர் பிளேட்டோ" ஆரோக்கியமான உடலில் தான் ஆரோக்கியமான உள்ளம் தங்கியிருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார். எனவே பூரண ஆளுமை உள்ள மனிதன் உடலிலும் உள்ளத்திலும் ஆராக்கிய முள்ளவனாக திகழ வேண்டும்.

உடல் ரீதியான ஆளுமையை மட்டுமல்லாது உளரீதியான ஆளுமை விருத்தியையும் மைதானச் செயற்பாடுகள் ஏற்படுத்துகின்றன. எவ்வாறென நோக்கும் போது சமூகத்திலுள்ள பல தளங்களிலும் பல பிரச்சினைகளும் ஏற்படுத்தும் அதிகமான போட்டியைக் கொண்டு காணப்படும் தளம் மைதானமாகும். இருப்பினும் நிகழுகின்ற போட்டிகளிலே தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் பட்சத்தில் பெறுபேறாக் கிடைக்கின்ற வெற்றி தோல்விகளை சமமாக ஏற்று தம்மை வளப்படுத்தி தம் ஆளுமையை விருத்தியாக்கி கொள்ளும் ம்மைதானச் செயற்பாடுகள் மூலம் மனிதர் பயிற்றுவிக்கப்படுகின்றனர். உதாரணமாக பாடசாலையிலோ வேறெந்த தனியார் நிறுவனங்களிலோ போட்டி நிகழ்வுகள் நடாத்தப்படும் போது அங்கே வெற்றியீட்டிய தரப்பினர்

மற்றும் தோல்வியை தழுவிய தரப்பினருக்கிடையே மனக்கசப்புக்கள், தளர்ந்து போகும் மனநிலைகள், ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமைகள் போன்ற பல்வேறு உள்ளக்கிளர்ச்சிகள் ஏற்படு கின்றன. ஆனால் மைதானத்திலே வெற்றிதோல் விகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு வளர்க்கப்ப டுவதால் வெற்றி பெற்றவர்கள் தோல்வியைத் தழுவிய வர்களின். தோளிலே தட்டிக் கொடுப்ப தையும், தோல்வியை தழுவியவர்கள் வெற்றி பெற்றவர் களைப் பாராட்டி மகிழ்வுடன் திரும்பு வதையும் காணமுடியும். இங்கு வெற்றி தோல்விகளை சமமாக ஏற்று அடுத்தபடி நோக்கி நகர்தல் தனி மனிதனின் ஆளுமை விருத்தியாகும்.

மேலும் மைதானத்திலே நாம் ஒன்று பட்டு கூட்டமாக இணைந்து செயற்படு வதற்காக குழு விளையாட்டுக்களினூ டாகப் பயிற்றுவிக்கப்படுகின்றோம். குழு விளையாட்டுக்களில் ஈடுபடும் போது விட்டுக் கொடுப்பு, ஒருமித்த மனப்பாங்கு, ஏனையோர் கருத் துக் களை ஏற் றல், தலைமைக்கு கட்டுப்பட்டு நடத்தல், பகிர்தல், புரிந்துணர்வு, போன்ற பல்வேறு மனப்பாங் குகள் எம்மிடத்தே உருவாக்கப்படுகின்றன. இவ்வாறான பண்புகள் எம்மிடத்தே உருவா கும் போது மைதானத்திற்கு வெளியே உள்ள பல்வேறு சமூகத் தளத்திலும் குழுவாகத் துலங்கி ஒப்படைக்கும் செயற்பாடுகளை நேர்த்தியாக நிறைவேற்றுகின்ற சிறந்த ஆளுமைப் பண்பினைப் பெற்றுக் கொள்கிறோம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தனி மனித ஆளுமை விருத்தியடைகிறது.

இலங்கைத் தாய்நாட்டிலே மும் மொழித் தேர்ச்சி அத்தியாவசியமாக விளங்குகின்றது. இம்மும் மொழித்திறனை விருத்தியடையச் செய்வதில் விளையாட்டுத் துறை மிகப்பங்காற்றுகிறது. எவ்வாறு என நோக்கும் போது விளையாட்டுத்துறையானது இன்று பரந்து பட்டுக் காணப்படுகிறது. வெறுமனே குறித்த போட்டிகள் குறித்த பிரதேசத்தினுள் மாத்திரம்

வரையறுக்கப்படாது, பல பிரதேசங்கள் கடந்து, மாகாணங்கள் கடந்து பல்லின வேறுபாடுகள் கொண்ட வேறுபட்ட சமூகத்தினிடையே பரந்து காணப்பட்டுகின்றது. மைதான விளையாட்டுக்களிலே எம்மை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் இத்தகைய இன, மத, கலாச்சாரத்தையுடைய இடங்களுக்குச் செல்லக் கூடிய வாய்ப்பு கிடைக்கிறது. அவ்வாறு செல்லும் போது அங்கு வாழும் வேற்று மொழி பேசுபவர்களுடன் அறிமுகமாகி அம் மொழியைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இதனால் மொழி ஆளுமை விருத்தியடைகின்றது.

இன்று மைதான விளையாட்டுக்கள், விளையாட்டுத் தொடர்பாக அண்மைக் கால விதிகள் பற்றிய எண்ணக் கருக்கள் வளர்ந்து வரும் ஆசிரிய சமூகத்தினருடையே குறைந்து செல்லக் கூடிய நிலை காணப்படுகின்றது. காரணம் இன்றைய வளர்ந்து வரும் ஆசான்கள் வெறுமனே புத்தகப் பூச்சிகளாக கல்வியில் மட்டும் அங்கத்துவம் வகிக்கின்றனர். இவ்வாறான ஆசான்கள் தனது திறமைகளை விருத்தி பெறச் செய்யாது மழுங்கடிப்பதோடு தனது மாணவர்களின் திறமைகளையும் மழுங்கடிக்கச் செய்கின்றனர். ஏனெனில் மைதானத்திலும் சபையிலும் தனது திறனை வெளிக்காட்டுவதில் பின் வாங்குபவர்கள். தம் வாழ்க்கையிலும் பின்னடைவே பெற்றுக் கொள்வார்கள். இது இயல்பு.



இவ்வாறாக மைதானச் செயற்பாடுகளூடாக தனி மனிதனின் உடல், உள, சமூக, ஆளுமைகள் விருத்தியடைகின்றன. எனவே மைதானச் செயற்பாடுகளிலே எம்மை விருப்புடன் ஈடுபடுத்தி அதனூடாக எமது ஆளுமையை விருத்தி பெறச் செய்வோம்.

(23ஆம் பக்க தொடர்ச்சி...)

எனக்கு மட்டும் ஒன்றும் வாங்கித்தரவில்லை அம்மா?" என்று ஏக்கத்துடன் அம்மாவின் முகத்தைப் பார்த்துக் கேட்டாள் அந்தப்பாலகி. எனக்கு இருவருடைய சோகம் நிறைந்த முகங்களைக் காணும் போது அழுகை வந்துவிட்டது. அதைப்பார்த்து நான் என்ன செய்ய முடியும்? எனக்கு பதினாறு வயதுதானே நடைபெறுகின்றது. போனவருடம் தான் எட்டாம் வகுப்புச் சித்தி எய்தினேன். அத்துடன் எனது தந்தையும் மறைந்து விட்டார். வறுமை நம்மை வாட்டியது வழி வேறில்லை. படிப்புக்கு முற்றுப்புள்ளி போட்டுவிட்டு ஒரு தச்சனின் கீழ் உதவி செய்து, வந்த ஊதியத்தைக் கொண்டும் இன்னொருவரை இரந்து நிற்காமல் அரைவயிற்றை நிரப்பி மானத்துடன் வாழ்க்கை நடத்துகிறோம். என் தாய் தன் சேயின் குறையைத் தீர்க்க முடியாததையிட்டு குமுறிக்குமுறி அழுதாள். அந்த சோகக் காட்சியைக் காணமுடியாமல் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டேன்.

நான் மறுபடியும் வீட்டினுள் பிரவேசித்த போது என் தாய் திருக்குடும்பப் படத்தின் முன்னே அழுதவண்ணம் "பாலக யேசுவே! நீரும் ஏழ்மையின் நிழலிலேதான் பிறந்தீர், இந்த ஏழை மனதை எப்படித் தேற்றப் போகிறீர். என் கணவனை எடுத்தீர். ஏழ்மையைக் கொடுத்தீர். நாம் கண்கலங்காமல் வாழவும் வழிகூற மாட்டீரோ? ஏழைகள் என்றும் துன்பத்தின் தோழராகத் தான் வாழ வேண்டுமா?" என்று வேண்டினாள். நான் மறு அறையில் அழுதவண்ணம் இருந்தேன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பின்னேரம், நானும் என் தாயாரும், வீட்டினுள் இருந்தோம். என் தங்கை நேரே தாயிடம் சென்று "அம்மா! நாங்களும் ஏழைகள் தானே" என்றாள். அவளின் வார்த்தைகட்கு "ஆமாம் நாங்கள் ஏழைகள் தான்" என்று பதில் பகன்றாள். "அப்படியென்றால் எனக்குப் புதுச்சட்டை, பட்டாசு ஒன்றும் வேண்டாம்" என்றாள் தங்கை. இதைக் கேட்ட தாயின் உள்ளம் தாங்கொணா வேதனைப்பட்டது. "ஏனம்மா இப்படிச் சொல்கிறாய்" எனக்கேட்டாள் ஆச்சரியத்துடன்.

"அம்மா, இன்று ஞான உபதேச வகுப்பில் சுவாமி சொன்னார் ஆண்டவர் மாரிக்குளிரிலே, மாட்டுத் தொழுவத்திலே ஏழையாகப் பிறந்தாராம், அவரின் தாய் தேவமாதா அவரைக் கந்தல் துணியால் போர்த்தினாராம் அவரைப் போல நாங்களும் ஏழைகள் தானே.எங்களுக்கு ஏனம்மா புதுச்சட்டையும் மத்தாப்பு வாணமும்" என்றாள் பாலகி. இதைக் கேட்டதும் அவளை வாரியணைத்து முத்தமாரி பொழிந்தாள் என் அன்னை. அப்போது என் அகத்தில் அன்னையின் வார்த்தைகள் பிரதிபலித்தன. அதாவது. "பாலக யேசுவே நீரும் ஏழ்மையின் குளிரில் தானே பிறந்தீர் இந்த ஏழை மனதை எப்படித் தேற்றப் போகிறீர்?"

என்மனம் ஈசனுக்கு நன்றி கூறியது . ஏழைத்தாயின் முறையீட்டை ஏழைத்தலைவன் கேட்டு விட்டார். அவரின் புகழ் என்றும் வாழ்க! என்றும் ஓங்குக!

(1964ஆம் ஆண்டு சத்தியவேத பாதுகாவலன் நடாத்திய நத்தார்
சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற பாடசாலை மாணவனின் சிறுகதை)

# குட்டிக்கவி 04

இனிய வாசகர்களே!
ஒவ்வொரு இதழிலும் வரும்
படத்திற்கு பத்து வரிகளில்
குட்டிக்கவிதையொன்றை எழுதி எமது
வழமையான முகவரிக்கு எழுதி
அனுப்பி வையுங்கள். தொடர்ந்து வரும்
இதழ்களில் பிரசுரிக்கப்படும்.

**சென்ற இதழின் "முதுமை காதல்" என்ற நிழற்படத்திற்கு கிடைத்த குட்டிக்கவி**

சுருங்கிய தோல்களும்
மங்கிய கண்களும்
குழிவிழுந்த கண்களும்
நரைத்த தலை மயிர்களும்

தோள் சாயும் நேரமெல்லாம்
சொல்லித் தந்த பாடம்
காதல் கடல் - கரை
கடந்தும் வாழும்

**ச. சாளினி**
விடத்தல்தீவு
மன்னார்

முதுமை தவழும் முகத்தில்
புன் முறுவல் கூறும் கதை
மதமும் வேறு எம் சனம் போற்றும்
சாதியும் வேறு இவளின் நான்
வயதிலும் ஒன்று குறைவு நான்
மனங்கள் காதலால் கலந்தது
திருமணமாய் கனிந்தது
தாத்தா பாட்டியாய் தரணியில் நிறைவு
வாழ்வை வாழ்வாய் வாழ மனங்களின்
இணைவே பேறு
அனைத்தையும் வென்றோம் எம் அன்பால்
அதனால் அன்று போல் இன்றும்
இணைந்தே உள்ளோம்.

**ச. யூட்டற்**
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு

# Thangamz

## Engineering (Pvt) Ltd

Company Reg No:
PV-115312

thangamzengneering@gmail.com
Tel: 077 8084164

27, Main Street, Cheddikulam, Vavuniya.

WES
World • Express • Services

# WORLD EXPRESS SERVICES

INTERNATIONAL LOCAL COURIER SERVICE

குறைந்த செலவில் துரித கதியில் உங்கள் உறவினர் நண்பர்களுக்கு பரிசுப் பொருட்களையும் பொதிகளையும் அனுப்பிவைக்க எங்களை நாடுங்கள்

எமது சேவையின் சிறப்பியல்புகள்

- விரைவானதும் துரிதமானதுமான Door to Door சேவைகள்.
- எந்தவொரு நாட்டுக்கும் 3 அல்லது 4 வேலைநாட்களில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்.
- 10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்
- தேவைமேற்படின் உங்கள் இடங்களுக்கே வந்து பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும்
- யாழ் மற்றும் அனைத்து உள்நாட்டுப் பிரதேசங்களுக்கும் துரிதகதியிலான சேவை

நாடளாவிய எமது கிளை நிறுவனங்களில் கிச்சலுகையை பெற்று மகிழ்ந்துகள்

இல:180/3, புகையிரதநிலையவீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா. 024 4903200 / 024 4928455

H No:338, Aluth Mawatha Road, Colombo 15. Tel: Office:520 894 / 0114 345 966

## OUR BRANCHES

| Kotahena: | Negombo: | Batticaloa: | Jaffna: |
|---|---|---|---|
| No:42, Kotahena Street, Colombo 13, Tel: 011 24 24 221 | No: 95,Sea Street, Negambo, Tel: 031 222 4544 031 493 6899 | No:419,Trinco Road,Batticaloa. Tel: 065 2228 995 065 4927 477 | No: 295, Palali Road,Jaffna. Tel: 021 2220 356 021 4923 677 |

**Hotline: 0773 870 952 / 0114 640 650**